பக்கங்கள் பத்து
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

சங்கு02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 3 சனிக்கிழமை (22-09-2001) தொலைபேசி 3378 ஒலி 285

## முதலமைச்சர் நியமனம் செல்லுபடியற்றது

## சென்னை உச்சநீதிமன்றம் தீர்ப்பு

# தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா

# நேற்று இராஜினாமாச் செய்தார்!

## புதியமுதல்வராக கோ. பன்னீர்ச்செல்வம்

(சென்னை)

ஐந்து மாதங்கள் தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவி வகித்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் செல்வி ஜெயராம் ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவியேற்றது செல்லுபடியற்றதென சென்னை உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையடுத்து செல்வி ஜெயலலிதா நேற்று தனது முதலமைச்சர்பதவியை இராஜினாமாச் செய்தார்.

இதனையடுத்து அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் கோ. பன்னீர்ச்செல்வம் நேற்றிரவு தமிழக ஆளுநர் ரங்கராஜன் முன்னிலையில் முதலமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

தமிழக முதலமைச்சராக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகாது என்று சென்னை உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்ததை அடுத்து அவர் முதலமைச்சர் பதவியை உடன் இராஜினாமாச் செய்தார்.

செல்வி ஜெயலலிதாவை அப்போதைய தமிழக ஆளுநர் செல்வி பாத்திமாபீபி முதலமைச்சராகநியமித்தமை செல்லுபடியாகாது என்றும் அரசியல் சாசனப்படி முதலமைச்சர் நியமனம் இடம்பெறவில்லை என்றும் நீதியரசர் எஸ். பி, பருஜா தலைமையிலான உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது:

சட்டப்பேரவை உறுப்பினர் அல்லாத ஒருவர் அரசியல் சாசனத்தின் 164வது பிரிவின்படி, முதலமைச்சராக நியமிக்கப்படலாம் என்றும், அதேவேளை அரசியல் சாச

(10ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகர்ப் பெண் கனடாவில்சுட்டுக்கொலை!

(டொறண்டோ)

காரைநகரைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் கனடாவில் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இச் சம்பவத்தில் காரைநகரைச் சேர்ந்த திருமதி சபா நடேசன் என்ற குடும்பப் பெண்

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்'குடாவில் புலிகளின் தாக்குதல்அச்சம் படையினர் உஷார்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தக் கூடுமென்ற அச்சத்தில் படையினர் தமது பாதுகாப்பை பலப்படுத்தி வருகின்றனர்.

இதைமுன்னிட்டு கொழும்புத்துறை கடற்கரையோரங்களிலிருந்து குருநகர் வரை பெருமளவான படையினர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பன்னீர்ச்செல்வத்துடன் 24 அமைச்சர்களும் நேற்று பதவியேற்றனர்

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா முதலமைச்சர்

னர் கோ. பன்னீர்ச்செல்வம் தமிழகத்தின்புதிய முதலமைச்சராகப் பதவி ஏற்றுள்ளார்.

## விடுதலைப்புலிகள் மீதான தடையை ஜனாதிபதி எந்நேரமும் நீக்கலாம்?

பதவியை உடன் இராஜினா
மாச் செய்தார்.

யிலான உச்சநீதிமன்றம் தீர்ப்

### பன்னீர்ச் செல்வத்துடன்
# 24 அமைச்சர்களும் நேற்று பதவியேற்றனர்

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா முதலமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்ததை அடுத்து அ.இ.அ.தி.மு.க சட்ட மன்ற உறுப்பினர் கோ. பன்னீர்ச்செல்வம் தமிழகத்தின்புதிய முதலமைச்சராகப் பதவி ஏற்றுள்ளார். முதலமைச்சர் கோ.பன்னீர்ச் செல்வத்துடன் 24 அமைச்சர்

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஜெயாவை முதல்வராக நியமித்தது சரியானதே
## முன்னாள் ஆளுநர் பாத்திமாபீபி

(சென்னை)

அ.இ.அ.தி.மு.க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவை முதலமைச்சராக நியமனம் செய்ததில் தாம் தவறு இழைத்ததாகக் கூறப்படுவதை தமிழக முன்னாள் ஆளுநர் செல்வி பாத்திமா பீபி மறுத்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்குப் பேட்டி அளித்த

(10ஆம் பக்கம் பார்க்க)

# சட்டம் தனதுகடமையை செய்திருப்பது திருப்தியே
## மு. கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

சட்டம்தன்னுடையகடமையைச் சரிவரச் செய்துள்ளது. செல்வி ஜெயலலிதா முதலமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்திருப்பதால் எனக்கு மகிழ்ச்சியுமில்லை, வருத்தமும் இல்லை என்று தமிழக முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி கருத்துவெளியிட்டுள்ளார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகள் மீதான தடையை ஜனாதிபதி எந்நேரமும் நீக்கலாம்?

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு ஜனாதிபதி கொள்கையளவில் இணங்கியுள்ளதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

அரசு-புலிகள் பேச்சுவார்த்-தை இடம் பெறவேண்டுமாயின் தம் மீதான தடையை நீக்கவேண்டுமென்றபுலிகளின் நிபந்தனைக்கமைவாகபுலிகள் மீதான தடையை நீக்கி அவர்களுடன் சமாதானப் பேச்சு நடத்த ஜனாதிபதி தயாராக இருப்பதாகவும் குறித்த அமைச்சர் மேலும் தகவல் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை தமிழ்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறும் நோக்குடன் அமைச்சர் பட்டி வீரக்கோன்தமிழர்விடுதலைக் கூட்டணியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது. புலிகள் மீதான தடை நீக்கத்தின் ஓர் முன்னேற்பாடாக இருக்கலாமென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந)

## ஜனாதிபதி தலதாமாளிகை விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவும்கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு சென்றுபுத்தபகவானின் புனித தந்தத்தை வழிபட்டனர்.

நேற்று மாலை தலதா மாளிகைக்குஇவர்கள் சென்றபோது பத்திரிகையாளர் எவரையும் உட்செல்ல பாதுகாப்புப் பிரிவினர் அனுமதி வழங்கவில்லை (ந-5)

# அமைச்சர் பதவியிலிருந்து விஜயபாலமெண்டிஸ்நீக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தினால் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட அமைச்சர்களின் பெயர் விபரங்களில் அமைச்சர் விஜயபால மென்டிஸின் பெயர் இடம் பெறவில்லை,

அதேவேளை வர்த்தமானி அறிவித்தலிலும் விஜயபால

(10ம் பக்கம் பாசக்சு]

# தமிழக முதலமைச்சராக மீண்டும் பதவியேற்பேன்
## செல்வி ஜெயலலிதா சூளுரை

(சென்னை)

நீதிமன்றத்தில் என்மீது உள்ள வழக்குகளைச்சந்தித்து நான் நிரபராதி என்பதை நிரூபித்து மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு முதலமைச்சராவேன் என்றுமுதலமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தபின் மக்களுக்குவிடுத்த

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்


### தேவை

சுத்தமான வேப்பங் கொட்டை தேவை: தொடர்பு - மில்க் வைற், யாழ்ப்பாணம். இ.விஜய கோபால், மில்க்வைற் சோப் இண்டஸ்றியல்ஸ், 527, கே. கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (3579)


## அடிக்கல் நாட்டல்

(புலோலி)

மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கனக்கடனுதவுகூட்டுறவுச் சங்கத்திற்கு சுமார் 10 இலட்சம் ரூபா செலவில் நவீன மாடிக் கட்டட மொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டும் விழா சங்கத்தலைவர். எஸ். விக்னேஸ்வரமூர்த்தி தலைமையில் அண்மையில் நடைபெற்றது:

பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர். ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன், இதற்கான அடிக்கல்லைச் சம்பிரதாய பூர்வமாக நாட்டிவைத்தார். (உ-52)

## விண்ணப்பம் கோரல்

தேசிய கல்விநிறுவகத்தால் நடத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி 2002/2003 கல்வி ஆண்டுக்கு தமிழ் மொழிமூல பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்வதற்கானவிண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும். [உ-3]

# தொண்டர்ஆசிரியர்களின் பெயர் விபரங்கள்

## அதிபர்களுக்கு அனுப்பி வைப்பு

## மீள் உறுதிப்படுத்தலுக்காக

[கோப்பாய்]

யாழ். வலயப் பாடசாலைகளில் உள்ள தொண்டர் ஆசிரியர்களின் பெயர் விபரங்கள் மீள் உறுதிப்படுத்தலுக்காக யாழ். வலயத்தைச் சேர்ந்த சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்பட்டியலில், சம்பந்தப்பட்ட பாடசாலையில் கடமையாற்றாதவர்களின் பெயர்கள் கடமையாற்றுவதாக இடம் பெற்றிருந்தாலோ அல்லது ஆசிரிய நியமனம் பெறத் தகுதியற்றவர்களின் பெயர்கள் இடம் பெற்றிருந்தாலோ அது தொடர்பாக அறியத் தருமாறு சகல அதிபர்களையும் கேட்கப்பட்டுள்ளது. (உ)

## அமைச்சுப் பதவி ஏற்காமைக்கான காரணங்களை பீரிஸ் விரிவாக எடுத்துரைப்பு

(கொழும்பு)

பொ. ஜ ஐ. மு- ம; வி.மு ஒப்பந்தத்தினடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள புதிய அமைச்சரவையில்தான் பதவி ஏற்காததற்கான காரணங்களை முன்னை நாள் அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் கண்டி மகாநாயக்கர்களிடம் எடுத்து விளக்கியுள்ளார்:

அமைச்சரவை எந்தவொரு அரசிலும் உயர் மேலாண்மை பெற்ற அமைப்பாகும். இதன் மதிப்பும் அந்தஸ்தும் பேணிப் பாதுகாக்கப்பட முடியாதென்றால் அதில் அங்கம் வகிப்பது முறையல்ல.

தினமும் ஒரு புது அமைச்சர் நியமிக்கப்படுவதும் மறுதினம் அவர் அகற்றப்படுவதுமாக அமைச்சரவை ஒரு சங்கீதக் கதிரை போலாகி விட்டது. நாட்டிற்குச் சேவைசெய்வதற்காக ஒருவர் அமைச்சராகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லையென அவர் மகாநாயக்கர்களிடம் விளக்கமளித்துள்ளார்: (உ)

## கையிருப்பு தீர்ந்த குளிசை தொடர்பாக கொழும்புக்கு தகவல் இல்லை

[யாழ்ப்பாணம்]

நல்லூர் ஆலய வீதியில் பிரதிஷ்டை செய்து தோல் துளைப் புழுக்களின் தாக்கத்திற்கு இலக்கானவர்களில் சுமார் 250 இற்கும் மேற்பட்டோர் யாழ் போதனாவைத்தியசாலையில்சிகிச்சைபெற்று வருவதாகவும்,

இந்நோயைக் குணப்படுத்தும் குளிசைகள் இங்கு இல்லை எனவும் தோல்வைத்திய நிபுணர் தெரிவித்துள்ள போதிலும்,

இந்தக்குளிசைகளின்தேவை பற்றி கொழும்பில் இருக்கும் யாழ்ப்பாண வைத்தியசாலைக்கான இணைப்பு அதிகாரிக்கு எவ்வித தகவலும் இதுவரை அனுப்பப்படவில்லை. என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## கண்ணிவெடிகள் மீட்பு

(கொழும்பு)

பறையனாளங்குளம் சந்திக்கு கிழக்கே 22 கி.மீ. தூரத்தில் உள்ள கன்னாடி என்ற இடத்தில் படையினருக்கும், விடுதலைப்புலி உறுப்பினர்களுக்குமிடையே இடம் பெற்ற மோதல்களையடுத்து அப்பகுதியில் தேடுதல் நடத்திய படையினர், இறந்த விடுதலைப் புலிகள் இயக்கம் உறுப்பினர் ஒருவரின் உடலையும் 3 இளைமோர் கண்ணி வெடிகளையும், 2 கைக் குண்டுகளையும் கண்டெடுத்ததாக ஊடகத் தகவல் மையம் விடுத்தசெய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது; (உ)

## முன்பள்ளி பயிற்சிநெறி ஆரம்பம் நாளை

[புலோலி]

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகின் வடமராட்சி உபநிலையத்தில் இன்று இடம் பெறவிருந்த முன்பள்ளிபயிற்சிநெறிஆரம்ப விழாவும் முன்பள்ளிப் பயிற்சிச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் தவிர்க்க முடியாத காரணங்களால்நாளை இடம் பெறவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதியும் பயிற்சி நெறி இணைப்பாளருமான எம். நடராஜசுந்தரம் அறிவித்துள்ளார்; (உ-52)

## விளையாட்டு விழா

(ஏழாலை)

மல்லாகம் சைவ வாலிபர் சங்க சனசமூக நிலைய சிறுவர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது;

சனசமூகநிலையத்தலைவர் ந. ஜெனாளன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவிற்கு வலி. தெற்கு பிரதேச சபைத் துலைவர் க. கமலசேகரன்பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். [செ-12]

## மழை வேண்டி கொரும்பாவி எரிப்பு

[இணுவில்]

சங்குவேலி சந்தரோடைப் பகுதிகளில், மழை வேண்டி மக்கள் கொடும்பாவிகள்எரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மழை உரிய நேரத்தில் இல்லாத காரணத்தால், விதைப்புக்காலம் நெருங்கியும் வீணே இருக்கும் நிலை வருமோ எனவும் சம்பந்தப்பட்ட பகுதி விவசாயிகள்கவலைவெளியிட்டுள்ளனர்: (உ-49)

## திருட்டு

[இணுவில்]

உடுவில்கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோவிலுக்குஅருகாமையில் அமைந்திருந்த வீடொன்றில் அண்மையில் நள்ளிரவு வேளை, தங்கநகைகள் மோட்டார் சைக்கிள் மற்றும் பெருந்தொகைப் பணம் என்பன களவாடப்பட்டுள்ளன: (உ-49)

## நீர்வையில் மாட்டு இறைச்சிக் கடை

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு சமீபமாக மாட்டு இறைச்சிக்கடை அமைக்கப் பட்டு வருகிறது;

பொதுச் சந்தை ஒன்று இவ்விடத்தில் செயற்படுமுகமாகவே மாட்டு இறைச்சிக்கடை அமைக்கப்பட்டுள்ளது.

மாட்டு இறைச்சிக் கடை அமைப்பது குறித்து பலரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (க)

## தங்கச் சங்கிலி திருட்டு

(கோப்பாய்)

கோப்பாய் மத்திப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் நான்கு நாளாக அதிகரித்து வருகின்றன;

கடந்த வியாழக்கிழமை இரவு கோப்பாய் நாவலடிப் பகுதியிலுள்ள வீடொன்றில் இரவு நேரம் நித்திரையாக இருந்த இளம் யுவதி அணிந்திருந்த தங்கச் சங்கிலியை கள்வர்கள் அறுத்துச் சென்றுள்ளனர்.

இதே தினம் கோப்பாய் பழைய வீதிப் பகுதிவீடொன்றிலும் திருட்டு முயற்சி இடம் பெற்றுள்ளது, (உ-79)


## 2 ஆம் வருட நினைவஞ்சலி



தோற்றம் 22- 12- 1939 மறைவு 15- 10- 1999

திதி: 22. 09. 2001

அமரர்

### ஆறுமுகம் கமலநாதன்

(B. A. Ceylon – Dip – in – Education)

(முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் வலிகாமம்-வலயம்)

ஆண்டுகள் இரண்டு சென்றதே உங்கள்
அன்பு முகம் காணாது
நெஞ்சமலர் வாடுதேஉங்கள்நேசமொழி கேளாது
காலங்கள் தான் போனாலும்
உங்கள் பாசமது மறையாது மாண்ட உங்கள்
பூதவுடல் மாநிலத்தில் உமது புகழ்
ஆண்டு நூறு சென்றாலும் அழியாது நிற்கும் ஐயா
நீங்கள் எம்மைப் பிரிந்தாலும்
உங்கள் நினைவலைகள் எம் நெஞ்சைவிட்டகலாது

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி க. சர்வேஸ்வரலலிதா,
மருமகன் சந்திரன்,
மச்சான், மச்சாள்மார்,
சகலன்மார், பெறாமக்கள்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (சி-2629)



கௌரவ அமைச்சர்

### கே.என். டக்ளஸ் தேவானந்தா

அவர்களுடன்

## யாழ்.மாவட்ட விவசாயிகள் சந்திப்பும் கலந்துரையாடலும்

காலம்: 2001 - 09 - 25 செவ்வாய்க்கிழமை காலை 10. 00 மணி
இடம்: வடக்குஅபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு யாழ்: அலுவலகம்.

### கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள்

- ★ விவசாயச் செய்கையை ஊக்குவித்தலும் சந்தைப்படுத்தலும்.
- ★ செய்கைபண்ணப்படாத தரிசு நிலங்களை செய்கைக்கு கொண்டு வருதல்.
- ★ வாழை அழிவு நட்ட ஈடு
- ★ மரக்கறி கொள்வனவும் உற்பத்தியும்.
- ★ மரம் நடுகைத் திட்டம்.
- ★ விவசாயிகளுக்கு உபகரணம் வழங்கல்.
- ★ புதிய கமநல கேந்திர நிலையம் இரண்டு அமைத்தல்.
- ★ விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் நியமனம்[கொவிநியாமக]
- ★ விவசாய உள்ளீடுகளை நியாய விலைக்கு வழங்கல்.
- ★ விவசாய ஓய்வூதியம் சம்பந்தமான பிரச்சினைகள்.

அனைத்து விவசாய சம்மேளனங்களையும், விவசாயிகளையும் இக்கலந்துரையாடலில் பங்கு பற்றி பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கமநல அபிவிருத்தி திணைக்களம்,
யாழ். மாவட்டம்.

(சி/2628)

# செய்தித் துளிகள்

## சிறுவர் தின போட்டிகள்

(மந்திகை)

சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தையொட்டி வடமராட்சி தெற்கு,மேற்கு பிரதேச செயலகத்தின் ஆதரவுடன் கரவெட்டிக் கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும் கவிதை, கட்டுரைப் போட்டிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை பி. ப. 3.00 மணிக்கு திரு இருதயக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

''சிறுவர்களே எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகள்'' என்ற தலைப்பிலும், ''முதியோர் தேசியசொத்தாவர்'' என்ற தலைப்பிலும் கவிதை, கட்டுரைப் போட்டிகள் இடம் பெறவுள்ளன; (உ23)

## புதிய சந்தை அமைப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் புதிய சந்தை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதற்கான அத்திவாரக் கல் அண்மையில் வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கத்தினால் நாட்டப்பட்டது. (செ)

## போலி சி. ஐ. டியினர் ஐவர் கைது

(கொழும்பு)

பம்பலப்பிட்டிப் பகுதியில் ஐந்து போலி சி. ஐ. டியினர் பம்பலப்பிட்டிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஐவரும் வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் மக்களிடம் பெருந்தொகைப் பணத்தை கொள்ளையிட்டதாகவும், பம்பலப்பிட்டிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 5 சி. ஐ. டியினரும் சிங்களவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## இறுதிஆட்டமும் பரிசளிப்புவிழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன்தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இறுதி ஆட்டம் நவாலி வடக்கு அட்டகிரிவிளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமைபிற்பகல் 3-00 மணிக்கு சுழிபுரம் விக்ரோரியன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் அராலி சில்வஸ்ராஸ் விளையாட்டுக்கழகம் குப்பிளான் ஞானகலா விளையாட்டுக்கழகம் எதிர் கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகமுமவிளையாடவுள்ளன.

இறுதி நாளான நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் எதிர் நவாலி சென்ற் பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகமும் ஊரெழு பாரதிவிளையாட்டுக்கழகம் எதிர் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

போட்டிகளை அடுத்து பரிசளிப்பு வைபவமும் இடம் பெறவுள்ளன. (இ

## கவிதை கட்டுரை போட்டிகள்

(மந்திகை)

சர்வதேசசிறுவர் தினத்தையொட்டி பளை சாவகச்சேரி பிரதேச செயலகங்களின் அனுசரணையுடன் நடத்தப்படும் தென்மராட்சி கல்வி வலயபாடசாலை மாணவர்களுக்கிடையேயான கவிதை, கட்டுரைப் போட்டிகள் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன் கிழமை பி. ப 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது:

வடமராட்சிப் பகுதியில் இடம்பெயர்ந்து தங்கியிருக்கும் மாணவர்களுக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் வலிகாமம் பகுதியில் தங்கியுள்ள மாணவர்கள் இணுவில் மத்திய கல்லூரியிலும போட்டி நடைபெறவுள்ளது:

பாடசாலை மட்டத்தில் ஒவ்வொரு பிரிவிலும் தலா ஒரு மாணவனை போட்டி மூலம் தெரிவு செய்து எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் கல்வி அபிவிருத்திப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு வலய கல்வி பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (உ-23)

## சிறுவர்,முதியோர் தினத்தை ஒட்டிய போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

ஒக்ரோபர் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம்7 ஆம் திகதி வரை சிறுவர், முதியோர் தின வாரம் அனுட்டிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் குடாநாட்டில் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

அதனை முன்னிட்டுஉடுவில் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையே, வலி தெற்கு பிரதேச செயலகம் கவிதை, கட்டுரை ஓவியப் போட்டிகளை நடத்தவுள்ள.து

இப் போட்டிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

''முதியோர் தேசியச்சொத்தாவர்'' என்ற தலைப்பில் கவிதை, கட்டுரைப் போட்டிகளும் ''சிறுவர்களே எதிர் காலததை உருவாக்கும் சிற்பிகள்'' என்ற தலைப்பில் கவிதை, ஓவியப் போட்டிகளும்நடத்தப்படஇருப்பதாக உடுவில் கோட்ட கல்வி அதிகாரி தெரிவித்தார். (உ-106)

## அபராதம் விதிப்பு

(மந்திகை)

சட்டவிரோதமாக எட்டுப் போத்தல் கள் வீட்டில் வைத்திருந்த ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது:

புலோலி கிழக்கு சந்தா தோட்டத்தைச் சேர்ந்த நல்லன் கந்தையா என்பவரே சட்டவிரோதமாகக் கள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த 18-ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார். (செ-23)

## சுகவாழ்வு

எய்ட்ஸ் ஓர் உயிர்கொல்லி நோய்! அதற்கு மருந்து இல்லை. எதிரான தடுப்பு மருந்துமில்லை. ஆனால் எய்ட்ஸ் வராமல் தடுப்பது உங்கள் கையிலேயே தங்கியுள்ளது. (எய்ட்ஸ் வருமுன் காப்போம்!)

-தரிசனம்

---

# கொழும்பு சென்ற குடாநாட்டு மாணவரைத் தூஷித்த விவகாரம்

# தமிழ் அதிகாரி தரும் விளக்கம்

(கொழும்பு)

கடந்த 15, 16 ஆம் திகதிகளில் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில்நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டிகளில் யாழ். குடாநாட்டுப் பாடசாலை மாணவர்கள் சிலர் மீது கல்வியமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் மிகவும் கடுமையாக நடந்து கொண்டதாக வெளியான செய்திகளை அந்த அதிகாரியான ஜி. பி. அல்பிரேட் உண்மைக்குப்புறம்பானதென மறுத்துள்ளதுடன், அது குறித்த தம்பக்க நியாயங்களையும் அறிக்கை மூலம் அனுப்பி வைத்துள்ளார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சகல மாகாணங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான இந்து மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், அதிபர்கள் கல்வி அதிகாரிகள் எனப்பலரும் வருகை தந்து மேற்படி போட்டிகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சியுடன் சென்றிருக்கிறார்கள்.

இவர்கள் யாவரும் இந்து சமய முறைப்படி விபூதி, பொட்டுக்கள் அணிந்துதான் வந்திருந்தார்கள், மகிழ்ச்சியோடு சென்றார்கள்.

இவ்வாறிருக்க யாழ்ப்பாணத்தின் ஒரு பிரபலகிறிஸ்தவக் கல்லூரியில் இருந்து இந்தமுறை மாத்திரம் வந்து கலந்து கொண்ட மூன்று இந்துப்பிள்ளைகள் இம்சைப்படுத்தப்பட்டார்கள் என்று கூறப்படுவது சுத்த அபத்தமாகும்.

போட்டிகள் நடைபெறும் இடங்களில் மாணவர்கள் தங்கி நிற்கும் போது பாடசாலைச் சீருடையை அணிந்திருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது வரும் மாணவர் நலன் கருதியும் போட்டி நம்பகத்தன்மை கருதியும் ஆகும்.

மாணவர்கள் யாவரும் பாடசாலைச் சீருடையில் பாடசாலை வளவுக்குள் தங்கும் போது,

★ இவர்கள் பாடசாலை மாணவர்கள் தாம் என்பதை இங்குள்ள அலுவலர்கள் எளிதில் இனங்கண்டு கொள்வர்.

★ காடைத்தனம் புரிவதற்கு எனவர முயற்சிப்பவர்களை இனங்காண முடியும்: (சென்ற வருடம் இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் இத்தகைய சம்பவமொன்று நடை பெற்றது.)

★ பாதுகாப்புப் படையினரின் வீண் தொல்லைகளில் இருந்தும் விலகிக் கொள்வதற்கு வாய்ப்புண்டு:

★ போட்டியிடும் மாணவர்கள் நடுவர்களால், இனங்காணப்பட்டால் சில வேளைகளில் பக்கச் சார்பான தீர்ப்புக்களையும் வழங்கி விடுவார்கள் என்று பலரும் குறை கூறிக் கொள்வார்கள். இந்த நிலைமையினைத் தவிர்த்துக் கொள்வதற்கு வசதியாக இருக்கும்.

இவ்வாறு பல காரணங்களுக்காகவேபாடசாலைச் சீருடையிலே மாணவர்கள் வந்து கலந்து கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

இவை முதலிய காரணங்களால் நாம் கடைப்பிடித்து வரும் ஒழுக்க விதிகளையும் ஒழுங்கு விதிகளையும் புறக்கணித்த நிலையில் மாணவர் சிலரும், மாணவருக்குப் பொறுப்பான ஆசிரியர் ஒருவரும் நடந்து கொண்டனர்: அழைத்து வந்த ஆசிரியர் எங்கள்ஆலோசனையை நல்ல நோக்கத்தோடு கேட்டுப் பிள்ளைகளை நெறிப்படுத்தி இருந்தால் பிள்ளைகள் ஒத்துழைத்திருப்பார்கள்.

சமய சின்னங்களை அணிந்து கொள்வது உண்மை ஆசாரத்திற்காவே அன்றி வெறும் அழகுபடுத்தலுக்காக இல்லை என்பதை எமது இளம் சமுதாயம் உணர்ந்து கொள்ளும் வகையில் நாம் அவர்களை வழிப்படுத்துதல் வேண்டும்.

பல வருடங்களாக நடைபெற்று வரும் தமிழ்த்தினப் போட்டிகளிலே பிராமணப் பிள்ளைகள், பிராமணகுலத்து ஆசிரியர்கள், அதிகாரிகள் பலரும் வெளி ஆரவாரமின்றி வெகு ஆசாரத்துடன் கலந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம்.

இந்தத் தமிழ்த்தினவிழாவுக்கு அழைத்து வந்து பிள்ளைகள் மனதில் பிழையான வீர தன்மையினை விதைத்து விட்ட ஒரு ஆசிரியரும், ஒரு தலைப்பட்சமாக விடயத்தை விசுவரூபமாக்கிய ஒரு சில பத்திரிகையாளர்களும் உள்நோக்கங்களை உணர்ந்து கொள்ளாமல் குறை விரித்துக் குதூகலிப்பதன் காரணம் இந்தத் தமிழ்தினத்தை இம்முறை நடைபெறவிடாமால் தடுப்பதற்காகவா அல்லது வேறு ஏதும் நோக்கத்துக்காவா என்பது தெரியவில்லை.

எனது உயர் அதிகாரிகள், பாடசாலை அதிகாரிகள், தமிழ் ஆர்வலர்கள், ஆசிரிய சங்கத்தினர்கள் ஆகியோரின் வேண்டுகோளுக்குத் தலை சாய்த்து ஒய்வுபெற்ற போதிலும் சன்மானம் கருதாமல் இந்தத் தமிழ்த்தின நிகழ்ச்சியை சிறப்பாக ஒழுங்கமைத்துச் செயற்படுத்தி வரும் எனது பணியினைப் போற்றாது விட்டாலும் பரவாயில்லை. தூற்றாது விடுவது தமிழ்த்தாய்க்குச் செய்யும் தலைசிறந்த வணக்கமாய் அமையும் என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (உ)

## இராசி பலன்

22..09.2001

பூரட்டாதி 06 சனிக்கிழமை

பஞ்சமி மு.ப 8. 14வரை

அனுசம் பி.ப5.53 வரை

இராகுகாலம் 9.02-10.32

சுபநேரம் 3.02-4.32

சித்தம்,சஷ்டி விரதம்

**மேடம்**

எதிர்பாராத பிரச்சினை, காரியத்தடங்கல், தொழில் நன்மை,மனக்கிலேசம்.

**இடபம்**

நல்ல வரவேற்பு,பிரயாண சுகம், காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை.

**மிதுனம்**

சந்தோசமான சம்பவம், காரிய அனுகூலம், தொழில் விருத்தி, நோய் குணமடைதல்.

**கடகம்**

வியாபார நன்மை, கௌரவக்குறைவு,வியாதி, சகோதரர் உதவி.

**சிங்கம்**

உடல் நோவு, காரியதாமதம்,பெரியோர்மனஸ்தாபம், கல்விச் சிறப்பு.

**கன்னி**

கூட்டு முயற்சி. அந்நியர் சந்திப்பு, காரிய நன்மை, தன வரவு.

**துலாம்**

மாதர் நட்பு, கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், வாக்குக்கலகம்.

**விருச்சிகம்**

நண்பர்கள் உதவி, சயன சுகம்,காரிய அனுகூலம், கற்பனை மிகுதி.

**தனுசு**

வீண்கோபம்,முயற்சி தாமதம்,தனவிரயம்,நிலைக்கேடு.

**மகரம்**

காரிய அனுகூலம், செல்வாக்கு,தனலாபம்,நிலைமாற்றம்.

**கும்பம்**

அதிகாரம்,தொழிற்சிறப்பு, முயற்சி நன்மை,நல்லசெய்தி.

**மீனம்**

வீண்பயம், புதியமுயற்சி, அபகீர்த்தி,கட்டுப்பாடு.

[பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது]

வளவன்

## தே.இ.சே. மன்றத்தின் கலாசாரப் போட்டிகள் இன்றும் நாளையும்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்படும் கலாசாரப் போட்டிகள் இன்றும் நாளையும் யாழ் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளன.

போட்டிக்கு விண்ணப்பித்து இதுவரை அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்களும் பங்கு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று குறுநாடகம், அபிநய நடிப்பு, நாட்டுக்கூத்துப் போட்டிகளும்,

நாளை பரதநாட்டியம், கிராமியநடனம்(குழு), புதிய நிர்மாணிப்பு நடனம் (குழு), பேச்சு, கிராமியப்பாடல் (தனி, குழு), சாஸ்திரிய பாடல், மிருதங்கம், ஓகன், வயலின், அறிவிப்பாளர் ஆகிய போட்டிகளும் இடம் பெறவுள்ளன. (து-3)


## ஸ்ரீ வாணியின் ஏழு கேள்விகள்

நாளைய 'வலம்புரி' யில் வெளிவருகிறது

★ போட்டி இல. 02 ற்கான ஸ்ரீ வாணியின் ஏழு கேள்விகள்.

★ போட்டி இல. 01 ற்கான விடைகள்

★ போட்டி இல. 01ல் பரிசில்கள்பெற்ற அதிர்ஷ்டசாலிகள் மூவரின் பெயர் விபரம்.

**ஸ்ரீ வாணி நகை மாடம்**

173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-2630)

# தேசிய போலியோ தடை மருந்து கொடுக்கும் தினங்கள் - 2001

## யாழ். மாவட்டம்

போலியோ நோயை மூற்றாக இந்நாட்டிலிருந்து ஒழிக்கும் நோக்குடன் கடந்த ஆறு வருடமாக போலியோ சொட்டுமருந்து கொடுக்கப்பட்டு வருகின்றது. தென்னிலங்கையில் கூடிய முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் வட.கிழக்கு மாகாணங்களில் கீழ் குறிப்பிட்ட காரணங்களால் இதில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படவில்லை.

1. காலத்திற்குக் காலம் மக்கள் இடம் பெயர்வதால் பிள்ளைகளைத் தேடிக் கண்டுபிடித்து மருந்து கொடுப்பதில் உள்ள சிரமம்.
2. இடம்பெயர்வு காரணமாக மக்கள் குறிப்பிட்ட இடங்களில் நெரிசலாக வாழ்கின்றபடியால் சுகாதாரத்தைப் பேணுவது குறைவாகக் காணப்படுகின்றது.

   இக்காரணங்களால் வட.கிழக்கில் இந்நோய் மறைமுகமாக இருக்கலாமென ஐயப்பாடு உண்டு. எனவே இவ்வருடமும் செப்டெம்பர் இன்று22ந் திகதி, ஒக்டோபர் 20ந் திகதியும் இரு தடவைகள் (05) ஐந்து வயதிற்குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் போலியோ மருந்து கொடுக்க சுகாதார அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கீழ்க் குறிப்பிட்ட நிலையங்களில் போலியோ தடை மருந்து கொடுப்பதற்கான ஏற்பாடுகளை யாழ். மாகாண பிரதிப் பணிப்பாளர் சுகாதார சேவைகள் மேற்கொண்டுள்ளார். இந் நிலையங்களில் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தடை மருந்து வழங்கப்படும். 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு முன்பு பல தடவைகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் இம்முறையும் இது கட்டாயமாகக் கொடுக்கப்பட வேண்டும். என வலியுறுத்தப்படுகின்றது. நூற்றுக்கு நூறு வீதமான பிள்ளைகளுக்குத் தடை மருந்து கொடுப்பதன் மூலம் இக்கொடிய நோய் எமது பிள்ளைகளுக்கு வராமல் தடுப்பது மட்டுமல்லாது எம் நாட்டிலிருந்தே முற்றாக இந்நோயை ஒழித்து விட முடியும்.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியான சிகிச்சா நிலையங்களின் பெயர்ப் பட்டியல் கீழே தரப்படுகின்றது.

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, தெல்லிப்பழை

1. ஆரம்ப சுகாதார நிலையம், தாவடி
2. ம ம. இணுவில்
3. இணுவில் மத்திய கல்லூரி
4. ம,ம. உடுவில்
5. மல்வம் சேச்
6. உடுவில் மேற்கு அந்திரான்
7. இராமநாதன் கல்லூரி,மருதனார்மடம்
8. ம.ம , சுன்னாகம்
9. யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
10. ம.ம.ம.ம. ,அளவெட்டி
11. ஆ.சு.நிலையம்,சங்குவேலி
12. மல்லாகம் சிகிச்சை நிலையம் (தெல்லிப்பழை)
13. ம ம.ம. புன்னாலைக்கட்டுவன்
14. ம.ம. ,ஏழாலை
15. மயிலங்காடு சிகிச்சை நிலையம்
16. ஏழாலை மாதர் சங்கம்
17. ஏழாலை பிரதேச சபை
18. வசாவிளான் சிகிச்சை நிலையம்
19. ஆ சு.நிலையம் குளமங்கால்
20. ஆ சு. நிலையம் ஈவினை
21. பன்னாலை சிகிச்சை நிலையம்
22. தாவடி காளி கோவிலடி
23. இணுவில் கலாஜோதி வாசிகசாலை
24. கல்லாரை
25. பன்னாலை
30. வளர்மதி பாலர் பாடசாலை தொண்டைமானாறு
31. கொற்றாவத்தை அ.த.க. ,பாடசாலை
32. பொலிகண்டி இ.த.க. பாடசாலை
33. கொற்றாவத்தைஅ.மி.த.க.,பாடசாலை
34. வல்வெட்டி இ.த.க, பாடசாலை
35. அம்பன் அ.ம.த.க. , பாடசாலை
36. மணற்காடு பாலர் பாடசாலை
37. குடத்தனை சிகிச்சை நிலையம்
38. பொற்பதி வாசிகசாலை

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பருத்தித்துறை

1. சோளன்கள் சிகிச்சை நிலையம்
2. மணியகாரன் தோட்டம் பாடசாலை
3. ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை
4. வல்லிபுரக்குறிச்சி கிராம அலுவலர் காரியாலயம்
5. திக்கம் சிகிச்சை நிலையம்
6. அல்வாய் பிரதேச சபை பணிமனை
7. அத்தாய் விநாயகர் பாடசாலை
8. வியாபாரி மூலை சிகிச்சை நிலையம்
9. சென்.அன்ரனி சிகிச்சை நிலையம்
10. மாதனை மாதர் சங்கம்
11. கற்கோவளம் சிகிச்சை நிலையம்
12. தம்பசிட்டி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம்
13. பருத்தித்துறை மத்திய மருந்தகம்
14. விக்கினேஸ்வரா சிகிச்சை நிலையம்
15. வதிரி சிகிச்சை நிலையம்
16. கப்பூது வாசிகசாலை
17. கரவெட்டி மத்திய மருந்தகம் மகப்பேற்று மனை
18. இராஜ கிராமம் சிகிச்சை நிலையம்
19. கிழவித் தோட்டம் வாசிகசாலை
20. கட்டைவேலி சனசமூக நிலையம்
21. கோயிற்கடமை சனசமூக நிலையம்
22. அம்பிகை பாலர் பாடசாலை
23. உடுப்பிட்டி சனசமூக நிலையம்
24. பாரதி சனசமூக நிலையம்
25. இலகடி சனசமூக நிலையம்
26. இமையாணன் மாதர் சங்கம்
27. கலைமகள் பாலர் பாடசாலை
28. உடுப்பிட்டி பிரதேச சபை
29. மாவட்ட வைத்தியசாலை வல்வெட்டித்துறை

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம்

1. சிறுவர் பூங்கா பாலர் பாடசாலை
2. ஈச்சமோட்டை பாலர் பாடசாலை
3. திருநகர் சனசமூக நிலையம்
4. குருநகர் சிகிச்சா நிலையம்
5. ஆ.வே மரியாள் பாலர் பாடசாலை
6. யூப்ளி மகப்பேற்று நிலையம் -1
7. யூப்ளி மகப்பேற்று நிலையம் -2
8. ஆயுர்வேதக் கல்லூரி
9. போதனா வைத்தியசாலை
10. கொட்டடி பாலர் பாடசாலை
11. நாவலர் சிகிச்சா நிலையம்
12. நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை
13. சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், கண்டி வீதி
14. காந்தி சனசமூக நிலையம், அரியாலை
15. ஞானக்குழந்தை பாலர் பாடசாலை, சிவப்பிரகாசம் வீதி
16. வள்ளுவன் சனசமூக நிலையம், வண்ணார் பண்ணை
17. அங்கர் பாமசி முன்-ரவி வீடு
18. கந்தர்மடம் சிகிச்சா நிலையம்
19. செட்டித்தெரு சனசமூகநிலையம், நல்லூர்
20. நல்லூர் சிகிச்சா நிலையம்
21. மூத்தவிநாயகர் சனசமூக நிலையம்
22. வண்ணார்பண்ணை சிகிச்சா நிலையம்

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மானிப்பாய்

1. சுற்றயல் கூறு, சங்கானை
2. ஆரம்ப சுகாதார நிலையம் , பண்ணாகம்
3. மத்திய மருந்தகம், தொல்புரம்
4. ஐக்கிய சங்கப் பாடசாலை, சுழிபுரம்
5. மத்திய மருந்தகம், வட்டுக்கோட்டை
6. வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி
7. கிராமிய வைத்தியசாலை,வட்டுக்கோட்டை
8. அராலி தெற்கு சரஸ்வதி மகா வித்தியாலயம்
9. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மானிப்பாய்
10. கிராமிய வைத்தியசாலை, பண்டத்தரிப்பு
11. மத்திய மருந்தகம்,இளவாலை
12. சனசமூக நிலையம் மாகியப்பிட்டி
13. மானிப்பாய் லயன்ஸ் கழகம்
14. சனசமூக நிலையம்,சுதுமலை
15. ஆரம்ப சுகாதார நிலையம் சாவற்கட்டு
16. ஆரம்ப சுகாதார நிலையம் முள்ளி, ஆனைக்கோட்டை
17. வை.எம் சி.ஏ ,நவாலி

### சுகாதார வைத்திய அதிகாரி சாவகச்சேரி

1. மிருசுவில் வடக்கு பாடசாலை
2. உச்சாய் பிரதேச சபை
3. மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்
4. கைதடி வடக்கு அம்பிகா மாதர் சங்கம்
5. கைதடி தெற்கு சமநல சேவை நிலையம்
6. வரணி ம.ம.ம.ம

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை கோப்பாய்

1. இடைக்காடு சிகிச்சா நிலையம்
2. சுற்றயல்கூறு அச்சுவேலி
3. மத்திய மருந்தகம் புத்தூர்
4. ஆரம்ப சுகாதாரநிலையம், வாதரவத்தை
5. சிறுப்பிட்டி சிகிச்சா நிலையம்
6. அச்செழு சிகிச்சா நிலையம்
7. நீர்வேலி சிகிச்சா நிலையம்
8. ஊரெழு சிகிச்சா நிலையம்
9. உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
10. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாய்
11. மாதா கோவிலடி, இருபாலை
12. கட்டப்பிராய் சிகிச்சா நிலையம்
13. கல்வியங்காடு சைவப்பாடசாலை
14. திருநெல்வேலி கலாமன்றம்
15. மத்திய மருந்தகம் கொக்குவில்
16. கிராமிய அபிவிருத்திச்சங்கம் கொக்குவில்
17. மத்திய மருந்தகம் மகப்பேற்று மனை, கோண்டாவில்
18. சூசையப்பர் கோவிலடி
19. கிராமசபை, புத்தூர்
20. ஆரம்பப் பாடசாலை சைவத்தமிழ், உரும்பிராய்
21. செருக்கப்புலம் அன்னங்கை சிகிச்சா நிலையம், கோண்டாவில்

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊர்காவற்றுறை

1. மாவட்ட வைத்தியசாலை, ஊர்காவற்றுறை
2. தம்பசிட்டி சனசமூக நிலையம்
3. மெலிஞ்சிமுனை சேச்
4. ஆரம்ப சுகாதார நிலையம் புளியங்கூடல்
5. ஆரம்ப சுகாதார நிலையம் நாரந்தனை
6. சுற்றயல்கூறு காரைநகர்
7. களபூமி கிராம அலுவலர் காரியாலயம்
8. வாரிவளவு ஆரம்பப் பாடசாலை
9. சுற்றயல் கூறு அனலைதீவு
10. ஆரம்ப சுகாதார நிலையம் எழுவைதீவு
11. கிராமிய வைத்தியசாலை வேலணை
12. சாட்டிமாதா சேச்
13. பராசக்தி வித்தியாலயம்
14. மண்டைதீவு
15. மாவட்ட வைத்தியசாலை புங்குடுதீவு
16) சுற்றயல்கூறு நயினாதீவு
17. மாவட்ட வைத்தியசாலை நெடுந்தீவு
18. நெடுந்தீவு மேற்கு நிலையம்
19. சுப்பிரமணியம் வித்தியாலயம்

**மாகாண பிரதிப் பணிப்பாளர்,**
**சுகாதார சேவைகள்,யாழ்ப்பாணம்.**

(C-2607)

### 2005ஆம் ஆண்டளவில்,

# போலியோ நோய் உலகில் இருந்து முற்றாக ஒழிக்கப்பட்டு விடும்

(யாழ்ப்பாணம்)

நாட்டின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் 5 வயதுக்குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் இன்றும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதியும் போலியோ சொட்டு மருந்து கொடுக்கப் படவுள்ளது.

இன்று வடக்கு- கிழக்கு மாகாணத்தில் நடக்க இருக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கும் நிகழ்வில் 5 வயதுக்குட்பட்ட 3இலட்சத்து 13 ஆயிரம்குழந்தைகள் இந்தத்தடுப்புமருந்தைப்பெறவுள்ளனர்.

இந்த உபதேசிய தடுப்பு மருந்தேற்றல் நடவடிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான ஆயத்தங்களை யுனிசெவ், உலக சுகாதார நிறுவனம், றோட்டரிக் கழகம் அரசசார்பற்ற அமைப்புக்கள் ஆகியவற்றின் ஆதரவுடன் சுகாதார அமைச்சு மேற் கொண்டுள்ளது.

இத்திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு சுமார் 5 ஆயிரம் சுகாதார தொழிலாளர்கள்தொண்டர்கள் ஆகியோர் அணி திரட்டப்பட்டுள்ளனர்.

வெற்றிகரமாக நிறைவேறிய உலகளாவிய சிறுவர் தடுப்பு மருந்தேற்றல் இயக்கத்தின் பயனாகஇலங்கையில் 1993 ஆம் ஆண்டுக்குப்பின், எவரையும் போலியோ பீடித்திருப்பதாக அறிவிக்கப்படவில்லை

போலியோ நோயை நாட்டில் இருந்து முற்றாக ஒழிக்கும் பொருட்டு சுகாதார அமைச்சு 1995 ஆம் ஆண்டில் 'யுனிசெவ்' உலகசுகாதார நிறுவனம் றோட்டரிக்கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்போடு தேசிய தடுப்பு மருந்தேற்றல் தினங்களை அறிமுகஞ் செய்தது.

ஆயினும் போர்ச்சூழல்காரணமாக வடக்கு- கிழக்கு மாகாணங்களில் தடுப்புமருந்தேற்றல் நடவடிக்கை பூரணமாக நிறைவேற்றப்படாத பகுதிகள் இன்னமும் காணப்படுகின்றது.

இந்த மாகாணங்களில் மக்கள் அடிக்கடிஇடம்பெயர்ந்து போவதும் வருவதுமாய்உள்ளனர்.

எனவே, சுகாதாரஅமைச்சு தேசிய தடுப்பு மருந்தேற்றல் இயக்கத்தை இந்த வருடம் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மட்டுமே நடத்துவதென்று முடிவு செய்துள்ளது.

போலியோ என்னும் இளம் பிள்ளை வாதம் ஒருவகை வைரஸ் கிருமியினால் உண்டாகிறது. பெரும்பாலும் பிள்ளைகளையே தாக்கும் இந்த நோய் அவர்களது உயிருக்கு உலை வைக்கவோ அங்கவீனமாக்கவோ வல்லது.

போலியோ நோய்க்கு மாற்று மருந்து இல்லை. இந்நோயைத் தடுக்க உலகெங்கும் பின்பற்றப்படும் நடைமுறை கிருமியைத்தாக்குதலாகும். இதன்பொருட்டு ஒவ்வொரு வருடமும் இரண்டு தினங்கள் ''தேசிய தடுப்பு மருந்தேற்றல் தினங்கள்'' ஆகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

போலியோ நோயை 2005 ஆம் ஆண்டளவில் உலகில் இருந்து முற்றாக ஒழிப்பதை உலகளாவிய போலியோ தடுப்பு இயக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

1988 ஆம் ஆண்டில் உலகெங்கும் 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் போலியோ நோயாளிகளாக இருந்தனர்.

2000 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 876 ஆக வீழ்ச்சி அடைந்தது.

அடுத்த 3 வருட காலத்தில் போலியோ நோய்க்கு எவரும் ஆளாகவில்லை என்று உறுதி செய்தால் 2005 ஆம் ஆண்டளவில் இந்த நோய் உலகிலிருந்து முற்றாகஒழிக்கப்படும்.

(உ)

### காலாவதியான

## குழந்தைகள் உணவு இனங்கண்டு அழிப்பு

(மந்திகை)

நெல்லியடிப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் காலாவதியான குழந்தைகளுக்கான உணவுப பொருட்கள விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டு சுகாதாரப் பிரிவினரால்அழிக்கப்பட்டது.

கடந்த 18ஆம் திகதி பருத்தித்துறை வைத்திய அதிகாரி பணிமனையும், பிரதேசசபை சுகாதாரப் பிரிவும்இணைந்து மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனையின் போதே இப் பொருட்கள் இனங்காணப் பட்டன.

குழந்தைகளுக்கான பால்மா, பிஸ்கடவகைகள், ஓமவாட்டர் ஆகியனவே இவ்வாறு அழிக்கபபட்டபொருட்களாகும். (செ-23)

### வைத்திய அதிகாரி பணிமனைக்கு

## நிரந்தரக் கட்டடம் அமைக்க நிதி ஒதுக்கீடு

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு நிரந்தர தனிக் கட்டடம் அமைப்பதற்காக சுகாதார அமைச்சினால் 14 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப் நடவடிக்கைகள் கடந்த 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது வரை காலமும் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையிலேயே மேற்படி பணிமனை இயங்கி

## கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

புதிய செம்மணிவீதி ஆனந்தபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தி தட்டிக்கேட்பார் இன்றி தொடர்ந்தும் இடம் பெற்று வருவதாக அபபகுதி மக்கள புகார் தெரிவித்துளளவர்.

[உ]

## ஆலயத் திருப்பணி வேலைகள்

[புலோலி]

இமையாணன் ஸ்ரீ முருகன் ஆலயம் 6இலட்சபரூபா செலவிலும் வதிரி ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலயம் 3இலட்சம் ரூபா செலவிலும்

### பல்கலைக்கழகத்தில் அனுமதியின்றி பயின்ற

## தென்பகுதி மாணவி கைது

[கொழும்பு]

பேராதனைப் பல்கலைக் கழகத்தில், அனுமதியின்றி கடந்த ஒன்றரை வருடகாலமாக கல்வி கற்று வந்த தென்பகுதியைச் சேர்ந்த போலி மாணவியைபொலிஸார்கைது செய்துள்ளனர்.

மேற்படி மாணவியின் செயற்பாடுகளில் பல்கலைக் கழகப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சந்தேகம் கொண்டதையடுத்து பேராதனைப் பொலிஸாருக்கு அறிவித்ததாகவும்,

சம்பந்தப்பட்டவர் மீது பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது அவர் பல்கலைக்கழக அனுமதி பெறாமலே அங்கு பயின்று வந்தமை புலனாகியதாகவும் தெரியவந்துள்ளது.

(உ)

## உயர்பதவி நியமனங்களில் தமிழர்கள் புறக்கணிப்பு

(நமதுநிருபர்)

இலங்கைஅரசு கடந்தசில வருடங்களாகஅரசஉயர்பதவிகளுக்கான நியமனத்தில் சிறுபான்மைத் தமிழர்களையும், முஸ்லிம்களையும புறக்கணித்து வருவதாகபொதுஅமைப்புக்கள் கவலை வெளியிட்டுள்ளன.

அரசஉயர்பதவிகளில் சிறுபான்மைமக்கள் நியமிக்கப்படுவது தொடருமானால் இன்னமும் பத்து வருடங்களில் உயர் நியமனங்கள் வழங்கப்படுவது முற்றாக புறக்கணிக்கப்படும் நிலை உருவாகும் எனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1996ம் ஆண்டு இலங்கை நிர்வாகசேவைக்குதெரிவுசெய்யப்பட்ட 125பேரில்சிறுபான்மை இனத்தைச்சேர்ந்த மூவரும் 1998ஆண்டுதெரிவு செய்யப்பட்ட152பேரில் சிறுபான்மை இனத்தைச்சேர்ந்த இருவர் மட்டுமேதெரிவுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(வ

## எமிரேட்ஸ் விமானசேவை மீண்டும் 27இல் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கைக்கான எமிரேட்ஸ் நிறுவனத்தின் விமானசேவைகள் மீண்டும் எதிர்வரும்27ம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

விமானசேவைக்கான அதிகரித்த காப்புறுதிக் கட்டணம் அறவிடப்படாதுமுன்பிருந்தகட்டணமே அறவிடப்படுமென சர்வதேச மீள்காப்புறுதி சேவைநிறுவனம் இலங்கைக்குஉறுதியளித்ததை அடுத்து இந்த விமான சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 27ம்திகதி ஆரம்பிக்கப்படும்இவ்விமானசேவை ஒக்டோபர் 27ம்திகதிவரை வாரத்திற்கு நான்குதடவைகள் சேவையிலீடுபடும். (ந5)

## அரசியல் தஞ்சம் புகுந்த சிங்கள பத்திரிகையாளர் தமிழகத்தில் கைது

[கொழுமபு]

அரசியல் புகலிடம் கோரி தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள இலங்கை பத்திரிகையாளர் ஒருவர் தமிழகப் பொலிஸாரினால் கைது செய்யப் பட்டுள்ளார்.

இலங்கை அதிபர் சந்திரிகாவிற்குபிரியாவிடை [Good Bye Chandrika] என்ற சர்ச்சைக்குரிய நூலை வெளியிட்ட கீர்த்திகலகம என்ற சிங்களப் பத்திரிகையாளரே தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மையால் இலங்கைஅரசினால் தனக்கு அச்சுறுத்தல் ஏற்படலாமென அஞ்சி இவர் தமிழகத்தில் தஞ்சம் புகுந்திருந்தார். கைது குறித்து கீர்த்தி கலகம தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவிற்கு அனுப்பியுள்ள அவசர கடிதத்தில்விசாரணைக்கென அழைத்துச் சென்ற பொலிஸார் தன்னிடம் உள்ளமுக்கியஆவணங்களைப் பறிமுதல் செய்துள்ளதாகவும் இவ் ஆவணங்களைத் தன்னிடம் திருப்பி ஒப்படைக்

வைத்திய அதிகாரி பணிமனைக்கு

## நிரந்தரக் கட்டடம் அமைக்க நிதி ஒதுக்கீடு

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு நிரந்தர தனிக் கட்டடம் அமைப்பதற்காக சுகாதார அமைச்சினால் 14 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான முதற் கட்ட நடவடிக்கைகள் கடந்த 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது வரை காலமும் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையிலேயே மேற்படி பணிமனை இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

(செ-23)

## அரசமரத்தில் சுயம்பு பிள்ளையார்

### பக்தர்கள் கண்டுகளிப்பு

(யாழ்ப்பாணம்)

ஏழாலையில் ஏழு கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பிள்ளையார் கோயில் முன்பாக இருக்கும் அரச மரத்தில் தலை, கண், தும்பிக்கை அமைந்த பிள்ளையாருடைய உருவம் தோன்றி உள்ளது.

இத்திருவுருவத்தை பக்தர்களும், பல்வேறு நாடுகளில் இருந்து இலங்கை வருவோரும் பார்வையிடுவதுடன், புகைப்படமும் எடுத்துச்செல்கின்றனர்.

(உ)

## கரையோரப் பகுதி பாதுகாப்புப் பணியில் பெருமளவு படையினர்

(ஈச்சமோட்டை)

யாழ்.குடாநாட்டின் கரையோரப்பகுதிப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் படையினர் தீவிரமாய் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த வகையில், இப்பகுதிகளில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு, சோதனை மற்றும் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டிருப்பதுடன்,

இரவு நேரத்தில் பரா வெளிச்சம் பாய்ச்சப்படுவதுடன், துப்பாக்கி வேட்டுச் சத்தங்களையும் அடிக்கடி கேட்க முடிகின்றது.

இதனால் இப்பகுதிப்பொது மக்களிடையே ஓரளவு பதற்றம் காணப்படுகிறது.

(உ-59)

## ஆலயத் திருப்பணி வேலைகள்

[புலோலி]

இமையாணன் ஸ்ரீ முருகன் ஆலயம் 6 இலட்சம் ரூபா செலவிலும் வதிரி ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலயம் 3 இலட்சம் ரூபா செலவிலும் பொலிகண்டி வீரபத்திரர் ஆலயம் 4 இலட்சம் ரூபா செலவிலும் திருப்பணி வேலைகள் நடைபெறவுள்ளன.

[செ-52]

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் செ. சிவநடராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ. குமாரவடிவேலும், அதி சிறப்பு விருந்தினராக பதில் மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசும், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆ.வ. கணேசலிங்கமும் கலந்து கொள்கின்றனர்.

திருமதி இராஜினி குமாரவடிவேல், திருமதிமங்கையர்க்கரசிதிருநாவுக்கரசு ஆகியோர் பரிசில்களை வழங்கவுள்ளனர்.

(செ)

தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள இலங்கை பத்திரிகையாளர் ஒருவர் தமிழகப் பொலிஸாரினால் கைது செய்யப் பட்டுள்ளார்.

இலங்கை அதிபர் சந்திரிகாவிற்குபிரியாவிடை [Good Bye Chandrika] என்ற சர்ச்சைக்குரிய நூலை வெளியிட்ட கீர்த்திகலகம என்ற சிங்களப் பத்திரிகையாளரே தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப் பட்டவராவார்.

இந் நூலை வெளியிட்ட ... லாமென அஞ்சி இவர் தமிழகத்தில் தஞ்சம் புகுந்திருந்தார். கைது குறித்து கீர்த்தி கலகம தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவிற்கு அனுப்பியுள்ள அவசர கடிதத்தில்விசாரணைக்கென அழைத்துச் சென்ற பொலிஸார் தன்னிடம் உள்ளமுக்கியஆவணங்களைப் பறிமுதல் செய்துள்ளதாகவும் இவ் ஆவணங்களைத் தன்னிடம் திருப்பி ஒப்படைக்குமாறும் கேட்டுள்ளார்.

[ந-4]

## யாழ். வைத்தியசாலை எலும்புக்கூடு விவகாரம்

### நேற்று முன்தினம் விசாரணை

[யாழ்ப்பாணம்]

யாழ் போதனா வைத்திய சாலையில் கண்டுபிடிக்கப் பட்டமனித எலும்புக் கூடுகள் தொடர்பான விசாரணை நேற்று முன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் நீதிபதி இ. த. விக்கினராஜா முன்னிலையில் நடைபெற்றது.

இதன்போது அரச பகுப்பாய்வுத் திணைக்கள அதிகாரிகள் யாழ் வருவதாக எழுதி அனுப்பிய கடிதத்தை யாழ் பொலிசார் நீதிவானிடம் சமர்ப்பித்தனர்.

யாழ்ப்பாணம் வரவுள்ள காலி காரப்பிட்டிய வைத்திய சாலை சட்டவைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி பிரியருபன்துஷா தலைமையிலான அரச பகுப்பாய்வு அதிகாரிகள் குழுவினரைக் கொண்டு பகுப்பாய்வினை மேற்கொண்டு அடுத்த மாதம் 3ந் திகதிக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ் பொலிசாருக்கு நீதிவான் பணித்துள்ளார்.

[இ-10-43]

## மாட்டுவண்டிச் சவாரி

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறைநாரந்தனை விவசாயிகள்சம்மேளனம்நடத்தும் மாபெரும் மாட்டு வண்டிச்சவாரி இன்றுசனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுளளது

(செ-75)

## குழாய்க் கிணற்றினால் பயன்

(யாழ்ப்பாணம்)

வலி கிழக்குப் பிரதேசசபை நிதி உதவியுடன் நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள குழாய் கிணற்றினால் பலர் நன்மையடைந்து வருகின்றனர்.

(உ)

# செய்தித் துளிகள்

## இலவச மருத்துவ கண் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய், தீவகலயன்ஸ் கழகங்கள் இணைந்து யாழ். போதனா வைத்தியசாலை பிரபல வைத்திய நிபுணர்களின் ஒத்துழைப்புடன் நடத்தும் மாபெரும் இலவச மருத்துவக் கண் பரிசோதனை முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை காரைநகர் டாக்டர் தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர் எஸ். சிவசுப்பிரமணியம், கண் சத்திர சிகிச்சை நிபுணர் எஸ். குகதாஸன், மகப்பேற்று வைத்திய நிபுணர் திருமதி ஜி. பவானி, பொதுவைத்திய நிபுணர் கே. மகேசன் ஆகியோர் இந்த இலவச மருத்துவ கண் பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு சேவையாற்றவுள்ளனர். (உ)

## கல்வி அமைச்சு அறிவிப்பு

[கொழும்பு]

இவ்வருடம் கல்விப்பொதுத் தராதரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பெறுபேறுகளுடன் பாடசாலைமட்டக்கணிப் பீட்டுப்புள்ளிகள் சேர்க்கப்பட மாட்டாதென கல்விஅமைச்சு அறிவித்துள்ளது.

அடுத்த ஆண்டில் இருந்தே இது நடைமுறைக்குகொண்டு வரப்படுமென தெரிவிக்கப்படுகிறது. [உ-4]

## வீடியோப் படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக்காட்சித் தொடரில் இன்று சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு பீற்றர் அன்ரனியோ வெக்கின் 'சவியோர்' என்னும் திரைப்படம் புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம் என புறநிலைப்படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## ரின்னறைகுடித்த இளைஞன்

(கோப்பாய்)

## இலக்கிய நூலுக்கு பரிசு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு நடத்திய 2000 ஆம் ஆண்டுக்கான இலக்கியநூல் பரிசுப் போட்டியில் ஆய்வு இலக்கியத்திற்கான பரிசு 'தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு, என்ற தனது நூலுக்கே கிடைத்திருப்பதாகவும், 'தொல்காப்பியர் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு' என்ற தனது நூலுக்கு பரிசு கிடைத்திருப்பதாக தவறுதலாக தகவல் வெளியாகியிருப்பதாகவும் பேராசிரியர் ப. புஸ்பரத்தினம் தெரிவித்தார். [உ]

## மரணவிசாரணை அதிகாரி கோரிக்கை

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை பிரதே அறையின் பின்பக்க ஜன்னலுக்கு கம்பி மற்றும் கண்ணாடி என்பவற்றைப் பொருத்துமாறு வடமராட்சி திடீர் மரண விசாரணை அதிகாரி இ. கிருபாகர சூரியன், மாவட்ட வைத்திய அதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரேத அறையினுள் காகம், நாய் போன்ற பிராணிகள் நுழையக்கூடிய ஏது நிலையைத் தவிர்க்கும் வகையிலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-32)

## மாணவர் அணி புறப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மாகாணங்களுக்கு இடையிலான தேசிய மட்டப் பாடசாலைத் தமிழ்மொழித் தினப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள 35 பேர் அடங்கிய யாழ். மாவட்ட மாணவர்களின் இரண்டாவது அணி கடந்த செவ்வாயன்று கப்பல் மூலம் திருமலை சென்றுள்ளது.

இவர்களுக்கான போக்குவரத்து, உணவு, தங்குமிடம் முதலியவற்றிற்கான செலவினங்களை வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## ஆண்டு விழா

# யுத்த நிறுத்தத்தை அறிவித்து விடுதலைப்புலிகளுடன் உடன்பேசுக

### பெண்கள் சகோதரத்துவ முன்னணி அரசுக்கு அழுத்தம்

(கொழும்பு)

இலங்கைஅரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முழுமையான அர்ப்பணிப்புடன்செயலாற்ற வேண்டுமெனபெண்கள் சகோதரத்து முன்னணி அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணவும், தமிழ் பேசும் மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கும், கோரிக்கைகளுக்கும் முன்னுரிமை வழங்கி, பிரச்சினைக்குத்தீர்வு காணவும், அரசு அக்கறையுடன் செயற்படுவது அவசியமெனவும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

யுத்த நிறுத்தத்தை அரசாங்கம் அறிவித்து விட்டு விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

இதனை மேற்கொள்ள அரசாங்கம் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தை நாடவேண்டுமென்றும் பெண்கள் சகோதரத்துவ முன்னணி அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. (இ)

## உறவினரிடையே கைகலப்பு சமரசம் செய்தவர் வாள் வெட்டில்காயம்

(மந்திகை)

மாமனுக்கும் மருமகனுக்கும்இடையே ஏற்பட்ட கைகலப்பை தடுத்து நிறுத்த முற்பட்ட நபர் வாள் வெட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழனன்று பருத்தித்துறை நகர்ப்பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 2 ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த சூ. இராசரத்தினம் (வயது-52) என்பவரேவாள் வெட்டுக்கு இலக்கான நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-23)

## குமுதினி படகுச்சேவை இடைநிறுத்தம்

[யாழ்ப்பாணம்]

அவசர திருத்த வேலைகளை மேற்கொள்ளும் பொருட்டு நேற்றுமுதல் மறு அறிவித்தல் வரை குறிகட்டுவானுக்கும் நெடுந்தீவுக்கும் இடையிலான குமுதினி படகுச்சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் அறிவித்துள்ளார். (உ)

## சிற்றி ஒவ் ரிங்கோ வாரத்தில் மூன்றுதடவை சேவை நடத்தக்கோரிக்கை

(கொழும்பு)

திருகோணமலையிலிருந்து வடபகுதிக்கான போக்குவரத்து சேவை மேற்கொள்ளும் 'சிற்றி ஒவ் ரிங்கோ' கப்பல் சேவையை வாரத்திற்கு மூன்றுதடவைகள் நடத்துவதற்கு அனுசரணை வழங்குமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

செஞ்சிலுவைச் சர்வதேச குழுப்பேச்சாளர் ஹர்ஷா குணவர்த்தன இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில்; 'சிற்றி ஒவ் ரிங்கோ' கப்பல் சேவையை அதிகரிப்பது தொடர்பாக பல மட்டங்களிலும் கலந்துரையாடி வருவதாகவும், சாத்தியக்கூறு தென்பட்டால் உரிய ஒத்துழைப்பு வழங்குவது பற்றி ஆலோசிக்கப்படுமென்றும் குறிப்பிட்டுள்ளார். (செ)

## வடமராட்சிமாணவர்களுக்கு பிறப்புப் பத்திரம் பெற்று கொடுக்க நடவடிக்கை

(மந்திகை)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளில் பயிலும், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாத மாணவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா தெரிவித்தார்.

இதற்கான நிதியுதவியினை சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கவுள்ளது.

இதற்கமைய பாடசாலைகளில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரமின்றி கல்வி கற்கும் மாணவர்களுடைய விபரங்களை அனுப்பி வைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-23)

## பரு. வைத்தியசாலை எக்ஸ் கதிர் இயக்கப்பிரிவு முற்றாக ஸ்தம்பிதம்

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் எக்ஸ் கதிர் இயக்கப்பிரிவுச் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

எக்ஸ் கதிர்இயக்கப் பிரிவிற்கு வேண்டிய முக்கிய இரசாயனப் பொருளின் கையிருப்புத்தீர்ந்த காரணத்தினாலேயே மேற்படி நிலை ஏற்பட்டுள்ளது.

## யு. என். எச். சி. ஆரினால் வலி. மேற்கில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்

## இளைஞன்

(கோப்பாய்)

தண்ணீரென எண்ணி ரின்னறைக்குடித்தவர் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீட்டில் வேலை செய்து கொண்டிருக்கும் போது தண்ணீர் தாகம் ஏற்பட்டதனால் சோடாப்போத்தலில் வைக்கப்பட்டிருந்த ரின்னரை தண்ணீர் என எண்ணிக்குடித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்றஇச்சம்பவத்தில் கோப்பாய் தெற்கு ஆதித்தன் வளவைச்சேர்ந்த இலங்கைநாதன் சதீஸ்குமார் (வயது-18) என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவர். (இ)

## தமிழ்த்தினவிழா

(நல்லூர்)

யா/புனித மரியாள் வித்தியாலயத்தின் தமிழ்த்தினவிழா இம் மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை, வித்தியாலய மண்டபத்தில், அதிபர். எம். செபஸ்தியாம்பிள்ளையின் தலைமையில் நடைபெறவுள்ளது. வித்தியாலய மாணவர்களின் இசை, நடன, நாடக நிகழ்ச்சிகள் இவ் விழாவில் இடம் பெறவுள்ளன.

(செ-103)

## ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

உடுவில் வடக்கு தமிழ் ஒளி சனசமூக நிலையத்தின் 41வது ஆண்டு நிறைவு விழாவும் கலை நிகழ்வுகளும் நாளை ஞாயிறு சனசமூக நிலைய மைதானத்தில் தலைவர் மா. பன்னீர்ச் செல்வம் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிதெற்கு பிரதேச சபைத் தலைவர் க. கமலசேகரனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் தெற்கு சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி சி. செல்வவிநாயகமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி ஆண்டு நிறைவு விழாவையொட்டி இன்று விளையாட்டுப் போட்டிகள் இடம் பெறவுள்ளன. (உ)

## விமானத்தில் தீவிபத்து

(கொழும்பு)

இரத்மலானை விமான நிலையத்தில் பயிற்சியில்ஈடுபட்டிருந்தவிமானம் ஒன்று தீ விபத்துக்குள்ளாகிஅதன்ஒரு பகுதி எரிந்து சேதமாகியுள்ளது.

இச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (வ)

## அபிவிருத்தித் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யு. என், எச். சி. ஆர் நிறுவன நுண் கருத்திட்டத்தின் கீழ் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவில் பின்வரும் வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளதாக உதவி திட்டமிடல் பணிப்பாளர் தேவராஜன் தெரிவித்தார்.

★ நலன்புரி நிலையங்களுக்கான அரை நிரந்தர வீடுகள் அமைத்தல்- ஆலடி, மட்டக்கச்சி, பெரிய மதவடி நிலையங்களில் இவ்வாறான 40 வீடுகள் அமைக்கப்படும்.

★ நலன்புரி நிலையத் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி.

★ கந்தரோடை, பழனி கோவிலடி நிலையங்களில் நீர் வசதியை ஏற்படுத்த குழாய்க் கிணறுகள் அமைத்தல்.

★ நலன்புரி நிலையங்களுக்கு மலசல கூட வசதிகள் ஏற்படுத்தல்.

★ மட்டக்கச்சி, ஆலடி. சபாபதிப்பிள்ளை. இக்கிரான், பிள்ளையார் முகாம்களில் உள்ளோரின் சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்க சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கல்.

★ உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி சுயதொழில் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்.

★ தாவடி கிராம அபிவிருத்திச் சங்கம் மூலம் கடித உறை தயாரிப்பு உற்பத்தி நிலையம்.

(உ-106)

ருப்புத்தீர்ந்த காரணத்தினாலேயே மேற்படி நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக அங்கு முறிவு, நெரிவு மற்றும் சிகிச்சைகளுக்குச் செல்வோர் பெரும் சிரமங்களுக்கு ஆளாவதாகவும் தெரியவருகிறது. (உ-23)

# ஒரு சில காரணங்களுக்காக சட்ட மூலத்தை எதிர்ப்பது உகந்த செயலன்று

## சுட்டிக்காட்டி ரணிலுக்கு கடிதம்

[கொழும்பு]

அரசியலமைப்பின் 17வது சட்டத் திருத்தத்தின்தொடர்பில் ஒரு சில காரணங்களைக் காட்டி முழு சட்ட மூலத்தையும் எதிர்ப்பது கொள்கை ரீதியாக உகந்ததல்ல என மக்கள் விடுதலை முன்னணி ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

17 வது சட்டத் திருத்தத்தில் அனைவரும் பெற்றுக் கொள்ளக் கூடிய திருத்தங்களை முன்வைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு கால அவகாசம் உள்ளது.

எனவே இந்த சட்ட திருத்தத்தை ஐக்கிய தேசியக்கட்சி ஆதரிக்குமென தான் நம்புவதாகவும் ஜனநாயக விரும்பிகள் அதனையே எதிர்பார்ப்பதாகவும் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-5)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு ஸ்ரீசித்திரவேலாயுதஆலயபரிபாலன சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று காலை 9.00 மணிக்கு கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(செ-5)

## இன்று ஒரு தகவல்

# மூட நம்பிக்கைகள்

இன்றைக்கு யார் முகத்தில் விழித்தேனோ தெரியவில்லை. பார்க்கிறவரெல்லாம் என்மேலே எரிந்து விழுகிறார்கள் என்றுசொல்லி அலுத்துக் கொள்கிறவர்கள் பலருண்டு: பார்க்கிறவர்களெல்லாம் எரிந்து விழுகின்றார்களென்றால் விழித்த முகத்தில் என்ன கோளாறு என்று யோசிக்கிறதை விட உங்கள் முகத்தில் அல்லது. மனதில் என்ன கோளாறு என்று யோசிக்கிறதுதான் நல்லது .ஒருபையன் ஒருபரீட்சை எழுதினான்; ஃபெயிலாகப் போனான். என்ன காரணம் என்று விசாரித்தார்கள்:

''வழக்கமாக நான் எழுதுகிற அந்தப்பச்சை நிறப் பேனை அன்றைக்குத் தொலைந்து போய் விட்டது சார்! வேறொரு பேனாவினால் எழுதுகிற நிலைமை ஆகிவிட்டது. அதுதான் பெறுபேறும் வேறுமாதிரி ஆகிவிட்டது என்றான். பேனாவின் நிறத்தைப் பார்த்தா [கலரை] புள்ளி (மாக்ஸ்) போடுகிறார்கள் என்று கேட்டால் அப்படி இல்லை சார்!... எனக்கு அந்தப் பேனாதான் இராசியான பேனை என்கிறான். இராசியான நிறம், இராசியான சைக்கிள், இராசியான வீடு இவையெல்லாம் உண்மையென்றா நினைக்கின்றீர்கள்? மனோதத்துவ நிபுணர்கள் இவையெல்லாம் அர்த்தமில்லாத விஷயம் - மூட நம்பிக்கை என்கிறார்கள்.

ஒருதடவை, இரண்டு தடவை பச்சைநிறப் பேனாவினால் எழுதிப் பாஸ் பண்ணிவிட்டான்; அதனால் பாஸ் பண்ணுவதற்கும், பச்சை நிறத்திற்கும் சம்பந்தம் இருக்கிறதென்ற எண்ணம் அவன் மனதிற்குள் கொஞ்சம் கொஞ்சமாக வேர்விட ஆரம்பித்து விட்டது. அவ்வளவுதான் மூடநம்பிக்கை அவன் மூளைக்குள் போய் உட்கார்ந்திருக்கிறது; இவற்றையெல்லாம் மனோதத்துவ நிபுணர்கள் சோதனைகள் மூலமாக நிரூபித்திருக்கிறார்கள்; பீ.எவ். ஸ்கின்னர் என்ற ஒருவர்தான் முதலில் இவற்றை ஆராய்ந்ததாகச் சொல்கிறார்கள்; அவர் என்ன செய்தார்? சில புறாக்களை தனித்தனியாக கூண்டுக்குள் அடைத்தார்: 15 நிமிடத்திற்கு ஒருதடவை அவற்றிற்குசிலதானியங்களை ஆகாரமாகக் கொடுத்தார். இப்படிக் கொஞ்ச நாட்கள் செய்து கொண்டிருந்தார்; அதன்பின்னர் பார்த்தால் 15 நிமிஷத்துக்கு ஒருதடவை அந்தப் புறாக்களெல்லாம் வித்தியாசமாக நடந்து கொள்ள ஆரம்பித்தன. ஒரு புறா தலையை மேலும், கீழும் ஆட்டுகிறது. ஒன்று கூட்டுக்குள்ளேயே அப்படியும் இப்படியும் சுற்றுகிறது; ஒன்று கழுத்தை ஒரு மூலைப் பக்கமாக நீட்டியது. 15 நிமிடத்துக்கு ஒருதடவை தவறாமல் தீனி போட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள், இருந்தாலும் அந்தப் புறாக்களெல்லாம அந்த நேரம் பார்த்து ஒவ்வொரு விதமாக நடந்து கொள்ள ஆரம்பித்துவிட்டன அதாவது மூடநம்பிக்கைக்கு ஆளாகிவிட்டன:

இது எப்படி என்று ஸ்கின்னர் விளக்கம் கொடுக்கிறார்; முதல் தடவையாக தீனி போடுகிறபோது தற்செயலாக அந்தப் புறா ஏதாவது செய்து கொண்டிருக்கிறதல்லவா? உதாரணமாக: ஒரு புறா தீனி வருகிற நேரத்தில் தற்செயலாக தலையைமேலேயும், கீழேயும் ஆட்டிக் கொண்டிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். இரண்டு மூன்று தடவை தீனி வருகிற சமயம் இதே மாதிரி செய்ததென்றால், அதன் பின்னர் இந்தப் பழக்கம் உறுதியாக ஆகிவிடுகிறது. ஒரு கட்டத்தில் தலையை ஆட்டினால் தீனி வரும்என்று அந்தப் புறா நம்ப ஆரம்பித்து விடுகிறது. அது தான்விஷயம்.

இன்னொரு விஷயம் மூட நம்பிக்கைக்கு ஆதரவான சான்றுகளை மட்டுமே மனிதன் தேட முயற்சி செய்கிறான். ஒரு நாள் ஒரு ஆளின் முகத்தில் விளித்து அன்றைக்கு ஏதாவது ஒரு கெடுதல் வந்து விட்டதென்றால், அதன் பின்னர் அந்த ஆளை பார்க்கிறபோதெல்லாம் என்ன கெடுதல் நடக்குமோ என்பதைத் தான் கணக்கில் எடுக்கிறான், அன்றைக்கே ஏதாவது நல்லது நடந்தாற் கூட அதை நினைத்துப் பார்க்கிறதில்லை.

ஒரு விமான விபத்தில் தப்பி வந்த சிலரை பேட்டி கண்ட போது, நாங்கள் செய்த பிரார்த்தனை தான் எங்களைக் காப்பாற்றியது என்று சொல்கிறார்கள். அதே விபத்தில் செத்தவர்கள் கூடக் கடைசிக் கட்டத்தில் பிரார்த்தனை செய்திருப்பார்கள். ஆனால் அதைச் சொல்வதற்கு அவர்கள் உயிருடன் இல்லை. அதனால் நிரூபிப்பது கஷ்டமாகப் போய் விடுகிறது. இப்படியெல்லாம் சொல்வதனாலே மூடநம்பிக்கை என்று சொல்வதாக யாரும் நினைக்க வேண்டாம்;

பல நல்ல நம்பிக்கைகளைக் கூட சரியான நிரூபணம் இல்லாததால் மூட நம்பிக்கை என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். அது வேறு, இது வேறு, இரண்டையும் போட்டுக் குழப்பவேண்டாம் இந்த இராசி பார்க்கிற விடயத்தை சிலர் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கணவர் தன் மனைவியைப் பார்த்து. தினமும் காலையிலே உன் முகத்தில் விழித்துவிட்டேன் என்றால், அன்று பூராவும் எனக்கு இராசியான நாள். எல்லாம் நல்ல விதமாக நடக்கிறது, என்று சொல்லி வைத்தார். அந்த ஆளை தனியாக அழைத்துக் கொண்டு வந்து, ஏன் சார்! நீங்கள் அப்படிச் சொல்வது நிஜம் தானா? என்று கேட்டேன்.

''அட நீங்கள் வேறே சார்! அப்படிச் சொன்னதனாற்றான்; காலையிலேயே எழுந்து காப்பி போட்டுக் கொண்டு என் முன்னால் வந்துமுகத்தைக் காட்டுகிறா! இல்லையென்றால் அவ எழும்புவதற்கு எட்டு மணிக்கு மேல ஆகிவிடும். நான் காப்பி போட்டு அவளுக்குக் கொடுக்க வேண்டி ஆகிவிடும் என்று சொன்னார் மிகவும் கில்லாடியான ஆள்;

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஊனமுற்றோர்க்கு ஊன்று கோல்கள்

[கிளிநொச்சி]

ஊனமுற்றோர் கொடி வாரத்தை முன்னிட்டு. முச்சக்கரவண்டிகளையும் ஊன்று கோல்களையும்ஊனமுற்றோருக்கு கிளிநொச்சி அரச அதிபர் ரி. ஐயாத்துரை அண்மையில் வழங்கினார்.

ஊனமுற்றோர் சங்கொடி வாரத்தை முன்னிட்டு, அன்ரன்தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சியில் 1612 பேர் ஊனமுற்றவர்கள் இருப்பதாகப் புள்ளி விபரங்கள்தெரிவிக்கின்றன, (வ)

# புலிகள் மீதான தடையை நீக்கி தமிழர்க்கு சுயாட்சி வழங்குக!

## சிங்களப் பத்திரிகையாளர் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகள்மீதான தடையைநீக்கி இனப்பிரச்சினையைத் தீர்ப்பதுடன் அவர்களுக்கு சுயாட்சிரீதியான அதிகாரத்தை வழங்குமாறு சமாதானத்திற்கான பத்திரிகையாளர் அமைப்பு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட இவ் வமைப்பில் அங்கம் பெறும் அரசசார்பு மற்றும் தனியார் பத்திரிகை நிறுவனங்களைச் சேர்ந்த பெரும்பான்மை இனப் பத்திரிகையாளர்களே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர். சமாதான முயற்சிகளை உடன் ஆரம்பிக்குமாறும். நாட்டில் பேரழிவை ஏற்படுத்திவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணுமாறும் கோரிக்கை விடுத்துள்ளடன் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குமாறும் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது:

இது சம்பந்தமான கலந்துடையாடலுக்கு ஏனைய பத்திரிகையாளர்களுக்கும் இவ் அழைப்பு விடுத்துள்ளது; (உ-4)

## நிறுவுநர் நினைவு நாளும் பரிசுத் தினமும்

(கோப்பாய்)

யா/ அத்தியார் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசுத் தினமும்இன்றுபி ப2.00 மணிக்கு அதிபர் சோ. விஸ்வலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது:

நிகழ்வில் ஜி; ரி. சற் திட்டக் கணக்காளர் லயன் செல்வரத்தினம் ஞானராசா பிரதம விருந்தினராகவும், வலி கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ குணசிங்கம், கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம், வலி கிழக்கு பிரதேச சபை உபதலைவர் யு. எல். ஏ ரவி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நினைவுப் பேருரையை மக்கள் வங்கி முகாமையாளர் க. ஆனந்தராசா நிகழ்த்துவார். (உ- 79)

## சாரணர் சின்னம் சூட்டல்

[யாழ்ப்பாணம்]

மாணவர்களுக்கு சாரணர் சின்னம் சூட்டும்நிகழ்வுயாழ். குட்டியப்புலம் அ த க பாடசாலையில் அண்மையில்இடம் பெற்றது.

பாடசாலை அதிபர் செ. சந்தசாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில்சிரேஷ்டசாரணர்தலைவனுக்கு அதிபர் சாரணர் சின்னம் சூட்டினார்.

வசாவிளான் மகாவித்தியாலய சாரணர் அணித் தலைவர் விஜயரமணனின்ஏற்பாட்டால் இடம் பெற்ற இந்நிகழ்வில் சாரணர் பொறுப்பாசிரியைசெல்வி பா. தர்சினிஉட்பட பலரும் சாரணியத்தின் முக்கியத்துவம் பற்றி கருத்துரை வழங்கினர். (க)

## சாரணர் சங்க 20 வது பாசறை

[யாழ்ப்பாணம்]

நேற்று முதல் மூன்று தினங்கள் காங்கேசன்துறைமாவட்ட சாரணர் சங்க 20 வது பாசறை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது;

இதற்கான சகல ஏற்பாடுகளையும் மாவட்ட ஆணையாளர் ந. சவுந்தரராஜனும், சாரணர் குழுத் தலைவர் நா. போஜனும் மேற்கொண்டனர்.

இப் பாசறையில், சாரணர் அணிகளுக்கிடையே போட்டிகள் நடத்தப்பட்டு இறுதி நாள் நிகழ்வில் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் 20ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியிடப்படுமென்று காங்கேசன் துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத் தலைவரும் உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளருமான அ. தற்பரானந்தன் தெரிவித்தார், (உ-106)

## ஊனமுற்ற குழந்தைகளுக்கு இந்தியாவில் இலவச பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் அங்கவீனர்களாகப் பிறந்த குழந்தைகளுக்கு, இந்தியாவில் இலவச பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையை மேற்கொள்ள யாழ். மாவட்ட லயன்ஸ் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது;

சென்னை இராமச்சந்திரா மருத்துவமனையில் மேற்கொள்ளப்படும் இச்சத்திர சிகிச்சைக்குச் செல்ல விரும்புவோர் பயணச் செலவை மாத்திரம் செலுத்துவதுடன். அங்கவீனமான பிள்ளைகளின் பெற்றோர்கள் பிள்ளையின் புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பத்தை லயன்ஸ் கழகத்தில் சமர்ப்பித்தால் சத்திரசிகிச்சைக்குரிய ஏற்பாடுகளைச் செய்ய முடியுமென லயன்ஸ் கழக பிராந்திய தலைவர் எஸ். ஞானராசா அறிவித்துள்ளளார். (உ-5)

## வடமராட்சியில் இரு கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்கள்

(புலோலி)

வடமராட்சியில், மேலும் ஒரு கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தை வடக்கு கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் உருவாக்கியுள்ளது.

இதுவரை வடமராட்சியில் பருத்தித்துறை கால் நடை வைத்தியஅதிகாரி அலுவலகம் மட்டும் புலோலியில் இயங்கி வந்தது.

தற்போது சரவெட்டிப் பிரதேசத்திற்கான புதிய கால் நடை வைத்தியஅதிகாரி அலுவலகம் செயற்படத் தொடங்கியுள்ளது:

இளைப்பாறிய கால்நடை வைத்தியஅதிகாரி வைத்திய கலாநிதி திருமதி புனிதம் தங்கராஜா இப்புதிய கால் நடை வைத்திய அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார்; (உ-52)

## 'ஆசிரியன்' மீண்டும் வருகை

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் வெளியீடான ஆசிரியன்' நீண்டகாலத்தின் பின் மீண்டும் வெளிவந்துள்ளது.

இப்பத்திரிகையில் அண்மையில் நடைபெற்ற இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் எழுச்சி மகாநாடு, சங்கச் செயற்பாடுகள் பற்றி பல்வேறு விளக்கக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (உ-10)

## கழிவுப் பொருட்கள் அகற்றுவது தொடர்பாக புதிய கட்டுப்பாடு

(புலோலி)

பருத்தித்துறை நகரசபைப் பகுதியில் வீடுகள், வர்த்தக நிலையங்கள், தேநீர் கடைகளில் இருந்து வெளியேற்றப்படும் பெருமளவு கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு நகரசபையிடம் முன்அனுமதி பெறவேண்டும் என பருத்தித்துறை நகரசபை வரியிறுப்பாளர்களுக்கு அறிவித்துள்ளது.

அன்றாடக்கழிவுப்பொருட்களை பருத்தித்துறை நகர சபை சுகாதாரத் தொழிலாளர்கள் டிராக்டர் மூலம் அகற்றி வருகின்றனர்;

ஆனால் வீடுகள, வர்த்தக நிலையங்கள, தேநீர்க்கடைகளின்பெருமளவான பொருட்களை வரியிறுப்பாளர்கள் சேகரித்துவைத்து நகரசபையில் முன் அனுமதிபெற்றால் மட்டுமே அகுப்பை கூழங்களை அகற்றமுடியும் என பருத்தித்துறை நகரசபை அறிவித்துளளது.

இவ்வாறான பெருந்தொகைக் கழிவுப்பொருட்களை நகரசபை அப்புறப்படுத்துவதற்கு விசேட கட்டணமும் நகரசபையால் அறவிடப்படவுள்ளது.

அன்றாடக்கழிவுப் பொருட்களுடன் பாரியகழிவுப் பொருட்களையும் வீதியோரங்களில் சேர்ந்து இடைஞ்சல்களை ஏற்படுத்தும் வரியிறுப்பாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பருத்தித்துறை நகரசபை வரியிறுப்பாளர்களுக்கு அறிவித்துளளது. (உ-52)

## சிந்தனைக்கு விருந்து

### நாட்டத்திற் கொள்ளல் நலம்

காப்பில்லாச் சேனை முகாம் காவலிலா ஆட்டுமந்தை
சாப்பாட்டி லேசுவையில் சக்கையிவை- யாப்பில்லாப்
பாட்டிற் குவமைகளாம் பைந்தமிழைப் போற்றுவார்
நாட்டத்திற் கொள்ளல் நலம்

'பழையவன்'

## பின்லேடனைவெளியேற்றும் உலாமாக்களின் தீர்மானத்திற்கு அமெரிக்கா வன்மையானகண்டனம்

(வாஷிங்டன்)

பின்லேடனை தாமாகஆப்கானை விட்டு வெளியேற வேண்டும் என்று முஸ்லிம் உலாமாக்களின் கோரிக்கையை அமெரிக்கா வன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்தமுடிவு பின்லேடனைப் பிடிப்பதற்கோ, நீதிவிசாரணை செய்வதற்கோ தண்டனைகள் கொடுப்பதற்கோ உதவாது என்றும் உயிருடன் பாதுகாப்பான இடத்துக்குத் தப்பி ஓடுவதற்கு வழிவகுக்கிறது என்று அமெரிக்கா கடுமையாகக்கண்டித்துள்ளது

தலிபான் அரசின் அதி உயர்ந்தஉலாமாக்களின்இந்த கோரிக்கை அமெரிக்காவின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உதவாது என்றும் பின்லேடனை உயிருடன் தப்பிச் செல்ல வழிவகுக்கும் என்றும் அமெரிக்க அதிபர் மாளிகை செய்தி தொடர்பாளர் ஆர்: எஸ்.பிளையர்தெரிவித்தார்:

பயங்கரவாதியான பின்லேடனைப் பொறுப்பான அதிகாரியிடமோ நாட்டிடமோஒப்படைக்கவேண்டும்: பேச்சுவார்த்தைகள் நடத்திக்கொண்டிருக்க இது உகந்த நேரமில்லை. ஆப்கானிலுள்ள பயங்கரவாதப்பயிற்சி முகாங்களைதலிபான் அரசு உடன் மூடவேண்டும் இதுதான் அமெரிக்க அதிபரின் கோரிக்கையுமாகுமென்று தொடர்பாளர் ஆர்.எஸ். பிளையர் தெரிவித்தார். (து)

## அமெரிக்காவுக்கு துணைபோனால் இஸ். ஓரங்கட்டப்படும் அரபு லீக் அறிவிப்பு

(கெய்ரோ)

அமெரிக்காவிற்கு இஸ்ரேல் துணை போகுமானால் அரபு நாடுகள் பயங்கரவாத எதிர்ப்பு அணியிலிருந்து ஒதுக்க நேரிடுமென்று அரபு லீக் அறிவித்துள்ளது.

அமெரிக்கா தொடுக்கின்ற பயங்கரவாத எதிர்ப்புப் போருக்கு சர்வதேச ரீதியிலோ பிராந்திய ரீதியிலோ இஸ்ரேல் அமெரிக்காவுடன் இணைந்து போரிட முனைந்தால். அரபு நாடுகள் ஒதுக்கிக் கொள்ளப் போவதாக அரபு நாடுகளின் லீக் செயலர் அமிர்து மூஸா தெரிவித்தார். (து)

## தகர்ந்த கட்டடங்களின் அத்திவாரத்திற்குள் ஆற்று நீர் புகும் அபாயம்

(நியூயோர்க்)

நியூயோர்க் நகரின் வர்த்தக மையத்தின் அத்தி வாரங்கள் வெடிப்பதால் பெரும் சிக்கல்கள் உருவாகியிருக்கின்றன.

20 அடி ஆழமான வர்த்தக மைய கட்டடத்தின் அத்திவாரங்கள் வெடித்துப் பிளப்பதால் கட்டடத்திற்கு அண்மையிலுள்ள பாஸ்ரன் ஆற்று நீர் இதற்குள் புகுந்து விலடாமென்று கட்டட வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆற்று நீர் கட்டட அத்திவாரத்தினூடாகஅருகிலுள்ள சுரங்கப்பாதைக்குள் புகுந்தால் நகரிலுள்ள அத்தனை சுரங்கப்பாதைகளும் நீரால் நிரம்பி நகருக்கே பெரும் கேட்டைத் தரலாமென்றும் கட்டட வல்லுநர்கள்அறிவித்துள்ளனர். (து)

## கணினிகளை தாக்கும் புதிய வைரஸ்

(சியோல்)

தென்கொரியாவில் கணனிகளிடையே புதிய ரக வைரஸ் ஒன்று பரவி வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை வரை 327 கணனிகள் இவ் வைரஸின் தொற்றிற்கு உள்ளாகி உள்ளன.

''நிம்டா'' என பெயரிடப்பட்டுள்ள இவ் வைரஸ் ஈ-மெயில் மூலமாகவே பரவுவதாகத் தெரிய வந்துள்ளது. (உ-3)

## அமெரிக்காவுடன் இணைய சீனா நிபந்தனை விதிப்பு

[பீஜிங்)

உலகப் பயங்கரவாத எதிர்ப்புக் கூட்டணியில்அமெரிக்காவுடன் சேர்வதற்குசீனா நிபந்தனை விதித்திருக்கிறது.

ஏற்கனவே பாகிஸ்தான் நிபந்தனை விதித்துத்தான் தாலிபான் அரசுடன் பேசுவதற்கு மூவர் கொண்ட குழுவை அனுப்பியதென்றும் காஷ்மீரை வைத்தே மேற்படி நிபந்தனை விதிக்கப்பட்டதென்றும் இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை, தாய்வான் பிரச்சினையில் அமெரிக்கா தலையிடா விட்டால்பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் தானும் சேர்ந்துகொள்வதாக சீனா அமெரிக்காவிற்கு நிபந்தனை விதித்துள்ளது.

ஆனால் அமெரிக்காஎவரையும் நிபந்தனையுடன்பயங்கரவாத எதிர்ப்பிற்குச் சேர்க்க மாட்டோம் என்று ஏற்கெனவே தெரிவித்துள்ளது. (து

## ஈராக் அதிபர் சதாம் மீதும் தாக்குதல் நடத்த கோரிக்கை

(நியூயோர்க்)

அமெரிகக கொன்சவேட்டிக் கட்சியினர், ஈராக் அதிபர் சதாம் ஹுசைன்மீதும் கடும் தாக்குதல் நடத்த வேண்டும் என்று அதிபர் புஷ்ஷைக் கேட்டுளளனர்.

கடந்த 11 ஆம் திகதி அமெரிக்க நகர்களின் முக்கிய ஸ்தானங்களை தற்கொலையாளர் விமானம்மூலம் தாக்கியளித்த சம்பவத்துக்கு பின்லேடன் முக்கிய சூத்திரதாரியாகக் கணிக்கப்படடுள்ளார் என்றும், பின்லேடனைப் போன்ற பயங்கரவாத எண்ணம்கொண்ட சதாம்மீதும் போர்தொடுக்க வேண்டும் என்றும் கொன்சவேட்டிக் கட்சியினர் கூட்டாக அதிபர் புஷ்ஷைக் கேட்டுள்ளனர். (து)

## அமெரிக்க விமான உற்பத்தி நிறுவனங்கள் ஆட்குறைப்பில் அக்கறை

(நியூயோர்க்)

அமெரிக்காவின் நகரங்கள் தற்கொலையாளிகளால் விமானம் மூலம் தாக்கப்பட்டதைய டுத்தவிமான உற்பத்தி நிறுவனங்கள் ஆட்குறைப்பில் ஈடுபட்டுள்ளன.

அமெரிக்காவின் பெரிய விமான உற்பத்தி நிறுவனமான போஜிங் விமான நிறுவனம் 30 ஆயிரம் தொழிலாளர்களைக் குறைக்கத் திட்டமிட்டுள்ளது.

அடுத்த ஆண்டு முடிவுக்குள் இது நடைபெறுமென்று தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க நகர்கள் மீதான தாக்குதலால் போஜிங் விமான விற்பனை வீழ்ச்சியடையுமென்று அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

இதனிடையே யூனிற்றர் எயர் லைன்ஸ் நிறுவனமும் 20 ஆயிரம் பேரை நிறுத்தத் தீர்மானித்துள்ளது. இதே போன்று அமெரிக்க எயர் லைன் நிறுவனம் 20 ஆயிரம் பேரை வேலையிலிருந்து விலக்க இருக்கிறது.

அடுத்த ஆண்டு அமெரிக்காவில்-குறிப்பாக உலகிலே விமானப் போக்குவரத்து குறைந்து விடுமென்று தெரிவிக்கப்படுகிறது. (து)

## செய்திப்பரல்

★ யுத்தம் செய்ய விரும்புவோர் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு ஆப்கானிஸ்தானை ஆளும் தலிபான் அமைபபு அறிவித்துள்ளது.

★ பயங்கரவாதத் தாக்குதலுக்குள்ளான பென்டகன் கட்டடத்தை திருத்தியமைக்க 52 கோடி அமெரிக்க டொலர் செலவாகும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

★ பாகிஸ்தான் அதிகாரிகள் தடைவிதித்த போதும் பாகிஸ்தானில் பின்லேடனின் படம் அமோகமாக விற்பனையாகிவருகின்றது.

★ வினைத்திறன் அற்ற வகையில் உயிரியல் இரசாயன ஆயுதப் பிரயோகத்திற்கு அமெரிக்கா தயாராகி வருவதாக தெரியவந்துள்ளது.

★ பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும்பிரயாணம்செய்ய வேண்டாம் என ஆஸ்திரேலியர் எச்சரிக்கப்பட்டுள்ளனர். (உ-3)

## தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் இடைநிறுத்தம் ஊழல் பேர்வழியாம்

தமிழ் நாடு காவல்துறைத் தலைமை இயற்குநர் எ. இரவீந்திரநாத் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

அ.இ.அ.தி.மு.க: ஆட்சிக்கு வந்தவுடன் ஜெயலலிதாவால் நியமிக்கப்பட்ட ஏ.இரவீந்திரநாத்நேற்றுமுன்தினம் வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

ஊழல் குற்றச்சாட்டுக்கள் உட்பட பல்வேறு குற்றச்சாட்டுகளுக்குஉள்ளானஇவர் திடீர் உத்தரவின் பேரில்பணி இடை நிறுத்தப்பட்டுள்ளார். இவரின் இடத்திற்கு நெயில் வாட் நியமிக்கப்பட்டுள்ளார். [து]

## பின்லேடனை வெளியேற்றும் தீர்மானம்

(காபூல்)

ஒஸாமா பின்லேடன் தாமாக ஆப்கானைவிட்டு வெளியேற வேண்டும்என்று அந்நாட்டு இஸ்லாமிய மதத் தலைவர்கள் கூட்டாக அறிவித்துள்ளனர்.

கடந்த மூன்று நாட்களாக மதத்தலைவர்கள் கூடி பின்லேடனை விடுதலை செய்வதா அமெரிக்காவிடம் ஒப்படைப்பதா என ஆராய்ந்து இறுதியில் இந்தமுடிவு எடுக்கப்பட்டுள்ளது. (து)


### வள்ளலே
# வைத்தீச வாழி வாழி



தூயமனக் கணபதீசு வரக்குருவும் தொன்னாட் செய்
தவத்தி னாலே
நேயமலி புதல்வோர்கள் நீணிலத்தே தோன்றினரால்
வாழி வாழி
ஆயவருள் வைத்தீசு வரக்குருக்கள் மணி நீ ஆ
சாரம் பேணித்
தேயமெலாந் தொழுதேத்த நின்றனையால்
சிவனருளால் வாழி வாழி

(வேறு - எண்சீர் விருத்தம்)

ஆசானாய்க் கொழும்பூரில் பணிபுரிந்தாய்
அங்கிருந்தும் மலையகம்போந்திருந்தா யாமால்
தேசுடையாய் ஏதும்நீ தெரிந்த தாகச்
செப்பியதை ஒருபோதும் கேட்ட தில்லை
நேசமுடம் வவுனியாவில் நின்று நீயும்
நிறைவாக வட்டூரில் கடம்பு ரித்தாய்
ஈசனருள் துணைகாப்ப எந்தாய் நீயும்
இவ்வுலகில் பல்லாண்டு வாழி வாழி

கற்றாரும் அறியாத காட்சி யோனே
கவிஞரெம் இளமுருகன் மூலம் நீயும்
பற்றோடும் ஈழத்துச் சிதம்ப ரேசர்
பண்பனைத்துஞ் சாற்றுகின்ற புராணம் தன்னை
முற்றாக அச்சேற்றி வெளியிட் டீரே
முன்னிதுபோல் நூலேதும் கண்ட துண்டோ
நற்றுணையே வைத்தீச நம்பி நீயும்
நானிலத்தே பல்லாண்டு வாழி வாழி

நன்றும்நீ தமிழ்த்தாயை நெஞ்சி ருத்தி
நாளெல்லாம் அவள்பணியை நயந்து செய்வாய்
ஒன்றல்ல இரண்டல்லப் பலவே யாகும்
உத்தமநீ பதிப்பித்த நூல்கள் நீளும்
குன்றாத அன்புடையாய் குருவே ஐயா
கூறுகின்ற கருணையுன்றன் பாலே காண்போம்
என்றும்நீ இளமையுடன் இருக்க வேண்டி
இறைதாளைத் தொழுகின்றோம் வாழி வாழி

வெண்பா

அந்தணநீ யிங்கண் அறம்புரந் தெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டவுயர் தேசிகனால்-முந்துபுகழ்
வள்ளலே வைத்தீச வாழிபல் லாண்டுகள்
உள்ளுவன பெற்றே உயர்ந்து.

வாழ்த்துபவர்:
வட்டுக்கோட்டையூர் புலவர்மணி
பண்டிதர் க. மயில்வாகனனார்

விளம்பர அன்பளிப்பு:
**எரிக்கணேஷ்**
564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-2633)

பொள்ளென ஆங்கே புறம் வேரார் காலம் பார்த்(து) உள்வேர்ப்பர் ஒள்ளியவர்
-குறள்

வலம்புரி

## சறுகல் ஏன்?

17 வது திருத்தசட்ட மூலம்தொடர்பானபிரேரணையில் அரசும் ஜே.வி.பியும்ஓர் இணக்கப்பாட்டிற்குவந்துள்ளன. எனினும் இப்பிரேரணை பாராளுமன்றில் நிறைவேற்றப்படவேண்டுமாயின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு இருப்பது அவசியம்.

ஏற்கனவே சுதந்திர ஆணைக்குழு அமைக்கும் நடவடிக்கைகளை வலியுறுத்தி வந்த ஐக்கிய தேசியக்கட்சி இப்போது சறுக்கத் தொடங்கியுள்ளது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கெதிராக ஐ. தே. கட்சி கொண்டுவர இருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசு முறியடிப்பதற்கு ஜே.வி.பி. துணைபோயிருந்தது. இந்நிலையில்அரசு ஜே. வி. பியுடனானஉறவால்கடுப்பேறிப்போயிருக்கும் ஐ.தே. கட்சி ஏதோவொரு காரணத்தை முன்வைத்து நான் இல்லை என்றால சட்ட மூலத்தை நிறைவேற்ற முடியாதென்ற தனது பலத்தை ஜே. வி. பிக்கு காட்ட வேண்டும்.

மற்றையதுபொதுத்தேர்தல் நடக்கக்கூடிய சூழ்நிலையில் ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றக் கூடிய வாய்ப்புக்கள் ஐ. தே கட்சிக்கு இருப்பது போல் தெரிவதால், சுதந்திர ஆணைக் குழுக்களுக்குத் தானே ஆதரவு வழங்கி தான் பதவியில இருககும் போது அனுபவிக்கக் கூடிய மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணிககு பாடம் புகட்டக் கூடிய அதிகாரங்களை இழகக நேரிடும். ஆதலால் சுதந்திர ஆணைக்குழு தொடர்பான பிரேரணையில் எட்ட நின்று விடுவதே புத்திசாலிததனம் என ஐ.தே.கட்சி கருதுகிறது.

எதுவாயினும் சுதந்திர ஆணைக்குழுவுக்கு ஆதரவு வழங்கும விடயத்துல ஐ.தே. கட்சியின் தலைமைககுள் கருத்து முரண்பாடு இருப்பது வெளிப்படை

இந்நிலையில் ஏற்கனவே சுதந்திர ஆணைக் குழுக்கள் அமைப்பதில் வேண்டா வெறுப்பாக இருந்த அரசுக்கு ஐ. தே. கட்சியின் தற்போதைய மனமில்லாப் போக்குசாதகமாகவே அமைந்துள்ளது.

ஒட்டு மொத்தத்தில் ஆளும்பொ . ஐ. ஐ முன்னணிஆட்சிஜே.வி.பியுடன் கூட்டுச சேர்ந்ததன்மூலம் ஐ.தே.கட்சியை கடும் நெருக்கடிக்குள் ஆளாக்கி விட்டதென்பதே உண்மையாகும்.

திறனாய்வுக் களம்

# அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை நேரிய வழிநின்று ஆக்கிய விமர்சனநூல்'இலக்கியக் கட்டுரைகள்'

இலக்கியங்கள் பலபடைக்கின்ற எத்தனையோ படைப்பாளிகளின் ஆக்கங்கள் வெளிவந்துள்ளன -வந்து- கொண்டிருக்கின்றன. அவற்றுள் வித்தியாசமான கோணத்தில் படைக்கப்பட்டது தான் அராலியூர். ந.சுந்தரம்பிள்ளையின் 'இலக்கியக் கட்டுரைகள்' என்னும் விமர்சன நூல்.

### மாணவர்க்கு ஏற்றநூல்

இந்நூல் க.பொ. த.சாதாரணதர வகுப்பு மாணவர்கள் தொடக்கம் பட்டதாரி வகுப்பு மாணவர்கள் வரை படித்துப் பயனுறத்தக்க வகையில் உருவாக்கப்பட்டுள்ளமை, இந்நூலிற்குரிய சிறப்பம்சம், அதிலும் தமிழ் மொழியை ஒருபாடமாகப் பயிலும் மாணவருக்கு இந்நூல் பெரிதும் பயனுறும் என்பதில் ஐயமில்லை.

அதுமட்டுமன்றி இலக்கிய ஆர்வலர்கள் தமிழறிஞர்கள் முதலியோர்க்கும் பயனுள்ளதாகவே அமைந்துள்ளது.

நூல்: இலக்கியக் கட்டுரைகள்.
அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை B.A., Dip In Ed.
பக்கங்கள் -150
விலை: ரூபா 150 /=

இந்நூல் ஆசிரியர் தனது முன்னுரையிலே ''இவைஇலக்கிய விமர்சனக் கோட்பாட்டு வாதப்பிரதி வாதங்களை உள்ளடக்கிய, வெறும்வரட்டு கட்டுரைகளல்ல மாணவர்களுக்குஉதவக்கூடியநடைமுறைப் பயன் பாட்டுக்கட்டுரைகள்' என்று குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிட்டுள்ளது உண்மையென்பது இந்நூலைப் படித்தவர்களுக்கு-படிப்பவர்களுக்குப் புரியும்.

### பயனுறு தகவல்கள்

சிறுகதை, நாவல், நாடகம் ஆகிய இலக்கியங்கள் பற்றி விமர்சிப்பதன் ஊடாகஇவை பற்றித் தெளிவு படுத்துவதுடன் பல நல்ல பயனுறு தகவல்களையும் தருகிறார்.

**செல்வி**

ஒரு இலக்கியப் படைப்பாளியை அவனது பணியில் மேன்மேலும் பிரகாசிக்கச் செய்வது ஆரோக்கியமான விமர்சனமே. அதனை நூலாசிரியர் செவ்வனே செய்துள்ளார்.

### தட்டிக்கொடுப்பது

விமர்சனம் என்பது எவரும் குறைகளைச் சுட்டிக் காட்டுவது மாத்திரமல்ல, நிறைகளையும் தொட்டுக் காட்டி தட்டிக் கொடுப்பதாகும். அதனை நூலாசிரியர் மிகவும் கவனமாகக் கையாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன்எத்தகைய காழ்ப்புணர்ச்சியுமின்றி ஒவ்வொருவருடைய படைப்புக்களையும் விமர்சித்திருப்பது நூலாசிரியரின் நேரிய பண்பைக் காட்டுகிறது.

இந்நூலாசிரியர் குறுந்தூர நோக்கின்றி தமிழ்மாணவர்களுக்கு நல்லதொருதிறனாய்வுக்களத்தைப் படைத்திருப்பது பாராட்டுக்குரியது.

# சங்கடங்கள் தீரச் சனீஸ்வரப் பெருமானைப் புரட்டாதிச்சனியிற் போற்றித் துதித்திடுவீர்

சைவப் பெருமக்கள் பெருமையுடன் போற்றும் புராணவரலாறுகளிலே ஈஸ்வரன் எனப்பெருமதிப்புடன் போற்றித் துதிக்கப்படுபவர்கள் ஒருசிலரேயாகும். விண்ணுலகோரும், மண்ணுலகோரும் போற்றும் கணேசர், குமரேசர், சண்டேசர், இராவணேசர், சர்வேசுவரர், நடேசர், என்பவர்களைப் போலச் சனீஸ்வரர் தனிச் சிறப்புடையவராக விளங்குகின்றார்.

### ஆட்டிப் படைத்தவர்

ஈசன் என்றால் எமக்கெல்லாம் முழுமுதலானவராக, வழிகாட்டியாக விளங்கும் பார்வதி பரமேஸ்வரராக, அர்த்த நாரீஸ்வரராகத் திகழும் சிவபிரானையே குறிப்பதாகும். இம்முதல்வராகிய ஈசனைப் போலவே விதிவழுவாது செயற்படுபவராகச் சனீஸ்வரப் பெருமான் நவக்கிரக நாயகர்களுள் தனிச் சிறப்பிடம் வகிக்கின்றார்.

சூரிய புத்திரனாகப் போற்றப்படும் சனீஸ்வரனானவன் ஆனானப் பட்ட சிவனையும், தேவியையுமே ஆட்டிவைத்த சக்தி படைத்தவனாவான். சிவபிரானைக் கறைக்கண்டனாகவும், பிட்சாடனனாகவும், சுடலையாடியாகவும், தக்கன் யாகத்தைக் கெடுத்து உலகமகா சக்தியையே ஆட்டிவைத்தும் தன் வல்லமையை உலகமே உணர வைத்தவன்.

**நீர்வை மணி**

மேலும்விநாயகர் யானைத் தலையைப் பெற்றதும், இராவணன் வீழ்ச்சியுற்றதும், இராமன் காடுசென்றதும், பாண்டவர்வனவாசம் போனதும் பிரமன்சிறைப்பட்டதும், எமன் உதைபட்டதும், நளமகாராசன், அரிச்சந்திர மகாராசன், சொல்லொணாத்துன்பங்கள் பட்டதும் சனிபகவானின் பார்வையாலன்றோ.

### சிவவழிபாடு செய்தவர்

சக்திமிக்கவனாகிய சனீஸ்வரபகவானை வெற்றிகொள்ளக் கூடியது மகாசக்தியாகிய மகேசுவரசக்தி ஒன்றே தான். விதியின் வலிமைமிக்க நாயகனாக அதிகாரமும், சக்தியும் மகாசக்தியினாலேயே வழங்கப்பட்டது முக்திக்குரிய தலமான காசியிலே சனிபகவானே சிவலிங்கம் நிறுவிவழிபட்டு, சாந்த மூர்த்தியாக கிரக பதவியும் சிறப்பும் பெற்று பக்திமிக்கவராக அருளொளி வீசிக் காட்சி தருகின்றார்.

சாதாரண மக்களுடைய வாழ்க்கையிலே சனிபிடித்தவன், நாக்கிலே சனி, வாக்கிலே சனி, பார்வையிலேசனி எனச் சனிபகவானின் செயற்பாட்டுடன் ஒப்பிட்டுப் பேசுவதை நாம் காண்கின்றோம். சனிபகவானின் சக்தியானது மானிட வாழ்வைப் பெரிதாகத் தாக்கத்திற்குள்ளாக்குவதை நாம் காணவும், அறியவும் முடிகின்றது. சனிபகவான் கிரக மண்டபத்திலே எப்பொழுதும்தனக்குரிய ஆதிபத்தியம்வரும்போதும், தனது நட்புக்கிரகங்களின், பார்வை சேர்க்கை ஏற்படும்போதும் மானிடர் ஒவ்வொருவருடைய கிரக சக்கரச் சுழற்சியிலே நன்றும், தீதும், செய்வதில் முதன்மைபெற்று உலகோரை ஈர்த்துக் கொள்கின்றார்.

### கொடுப்பவனும் கெடுப்பவனும்

கொடுப்பவனுமசனிதான, கெடுப்பவனும சனிதான் என்றும், ஆனானப்பட்ட அரசர்கள் முதற் பேரறிவாளர்கள், பெருவல்லமை பலவும் கொண்டவர்களையும், சனிபகவான் தன் பார்வையைக் கெடுப்பதும் வல்லமையற்றோர் பலரையும், நொடிப்பொழுதில் தன்பார்வையால் உலகில் உயர்த்திவிடுவதும் அனுபவரீதியாக நாம் காணவும, கேட்கவும் முடிகின்றது.

வல்லமைமிக்க நவக்கிரக நாயகனாகிய சனீஸ்வரப் பெருமானைச் சனிக்கிழமைகளில், அதுவும்புரட்டாதிமாத சனி நாளிலே விரதமிருந்து எள் எண்ணை எரித்து வழிபாடுகள் செய்வதன் மூலம், அவர் பார்வையால் வரும் இடர்பாடுகள் நீங்கி நலம் பலபெறலாம் என்பது ஆன்றோர் நமக்குக் காட்டிய வழியாகும்.

எனவே புரட்டாதிச் சனி நாள்களிலே நாமும் சனீஸ்வரனை வழிபட்டு நற்பலன் அடைவோமாக

**சனிபகவான் துதி**

முனிவர்கள் தேவரேமு மூர்த்திகள் முதலினோர்கள்
மனிதர்கள் சகலவாழ்வுன் மகிமையதல்லா துண்டோ
கனிவுள தெய்வம் நீயே கதிர்சேயே காகமேறுஞ்
சனியனே உனைத் துதிப்பேன் தமியனேற்கருள் செய்வாயே

## தினசரி தியானம்

### மேகமண்டலத்துக்கு மேல்

ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு
உயர் செல்வ மெல்லாம்
அன்றென்றிரு, பசித்தோர் முகம் பார்
நல் அறமும் நட்பும்
நன்றென்றிரு, நடுநீங்காமலே
நமக்கு இட்டபடி
என்றென்றிரு மனமே உனக்கே
உபதேசம் இதே.

- பட்டினத்தார்

ஒண்பொருளே உயர்ந்த எண்ணத்தில் என் உள்ளம் யாண்டும் உறைந்திருப்பதாகுக.

ஆகாய விமானம் மேலே பறக்கிறது. மேக மண்டலத்துக்கு மேலேஅது போய் விட்டால் அதன் வேகமான பயணத்துக்குத் தடையொன்று மில்லை. மனிதன்எண்ணத்தில் மிக உயரமாய்ப் போய் விடுவானால் உலகத்தவர்களிடமுள்ள குறைபாடுகளோடு அவனுக்கு முரண்பாடு உண்டாகாது.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

# பார்வைக் குறைபாருடைய பாடசாலை மாணவர்களுக்கு இலவச மூக்குக்கண்ணாடி

(யாழ்ப்பாணம்)

பார்வைக் குறைபாட்டினால் துயருறும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு கண் பரிசோதனை செய்து இலவசமாகக் கண்ணாடி வழங்குவதற்கான தீர்மானம் ஒன்றினை ''மாணவர் நலன்புரிச் சேவை'' என்பதாகச் செயற்படுத்தவுள்ளதாக, தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமப் பொறுப்பாளர் எஸ். மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் குறிப்பிட்ட பாதிப்புக்குள்ளான வறிய. கல்வியில் ஆர்வமுள்ள பிள்ளைகள் இருவரின் பெயர் விவரங்களை முதற் கட்டமாகத் தமக்கு அனுப்பி வைக்குமாறும், விண்ணப்பப் படிவங்கள் பற்றிய விபரங்களைப் பெறக் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளுமாறும் பாடசாலை அதிபர்களைக் கேட்கப்பட்டுள்ளது.

(உ)

# 240 வீடுகள் அமைக்க யு.என்.எச்.சி.ஆர்.உதவும்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த நிலையில் நீண்ட காலமாக நலன்புரி நிலையங்களில் தங்கி வாழும் மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் 40 குடும்பங்களுக்கும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 200 குடும்பங்களும் பயன்பெறவுள்ளன.

இத் திட்டத்துக்காக வடக்கு வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சிகளையடுத்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் சுமார் 6 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

அதே போல் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா இருபத்தையாயிரம் ரூபா வீதம் சுமார் 6 மில்லியன் ரூபாவை வடக்கின் புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையும் ஒதுக்கீடு செய்துள்ளது. (ந)

# 17 வது திருத்தசட்டமூலம் 24 இல் வாக்கெடுப்பு

(கொழும்பு)

17 வது அரசியல் யாப்பு சீர்திருத்தத்தை நாளை மறு தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அன்றைய தினமே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவும், வாக்களிப்பு நடத்தவும் அரசியல் கட்சித் தலைவர்கள் இணங்கியுள்ளனர்.

சபாநாயகர் அனுர பண்டாரநாயக்க தலைமையில் நேற்று நடைபெற்ற அரசியல் கட்சித் தலைவர்களுடனான கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ந-4)

# 17வது திநத்தச்சட்டமூலத்தில் புதிய உபவிதி இரகசிய இணைப்பு

## சுதந்திர ஊடக அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசியற்சட்டத்தின் 17வது திருத்தத்தினுள் புதியதொரு உப விதியை இரகசியமாக சேர்ப்பதன் மூலம் ஊடக சுதந்திரத்தையும் அச்சுறுத்தலுக்குள்ளாக்குவதாக ஐ. தே கட்சியின் சுதந்திர ஊடக அமைப்பு (FMM) பொ. ஜ ஐ முன்னணியையும், ஜே. வி. பியையும் குற்றஞ்சாட்டியுள்ளது.

சுதந்திர ஊடகத்தை தேர்தல் காலங்களில் சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவின் கண்காணிப்பின்கீழ் கொண்டு வருவதற்கெதிராக தாம் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக ஊடக அமைப்பின் அமைப்பாளர் சுனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இப்பொழுது தேர்தல் காலங்களில் கட்சிகளுக்கு பிரசார நேரம் ஒதுக்கும் நோக்கில்தேர்தல் ஆணையர் தொலைக்காட்சி, வானொலி நிறுவனங்களுக்கு பணிப்புரை வழங்குகிறார். புதியஉப விதியின்படி தேர்தல் ஆணையாளர் வானொலி, தொலைக்காட்சிக்கு மட்டுமன்றி செய்திப் பத்திரிகைகளிற்கும் பணிப்புரைகளை வழங்கக் கூடியதாகவிருக்கும்.

இதற்கு விதிவிலக்காகஏதேனுமொரு அரசியற் கட்சியை ஆதரிப்பதாக பிரகடனம் செய்யும் ஊடகநிறுவனத்திற்கு தேர்தல் ஆணையாளர் பணிப்புரைகளை வழங்கமாட்டார்.

இதுபற்றி ஐ.தே.கட்சியைச் சேர்ந்த கருணாசேனகொடித்துவக்குகூறுகையில்பொ.ஜ.ஐ முன்னணிஜே.வி.பியின் ஆதரவுடன்சுதந்திரஊடகங்களின் வாயை மூடிவிடப்பார்க்கிறது என்று கூறியுள்ளார். (ந)

# யுத்தத்தில் விதவை ஆனோர் கொழும்பில் சந்திக்க ஏற்பாடு

(கொழும்பு)

யாழ்ப்பாணம், வவுனியா மட்டக்களப்பு, ஆகிய பகுதிகளில் யுத்தத்தினால் விதவைகளாக்கப்பட்டமுப்பத்தைந்து தாய்மார் களையும், அவர்களது பிள்ளைகளையும் கொழும்புக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை ஒய்வு பெற்ற படை அதிகாரிகள் சங்கத்தினர் செய்துவருகின்றனர்.

இதேபோல் தென்பகுதிகளிலும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இராணுவ வீரர்களின் மனைவி, பிள்ளைகள் உள்ளிட்ட 35 பேரையும் கொழும்புக்கு அழைத்துவந்து இரு தரப்பினரையும் ஒன்று சேர்த்து நிகழ்ச்சித் திட்டமொன்றை தயாரிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் அடுத்த மாதம் 5ம் திகதியில் இருந்து 7ம் திகதி வரை நடத்தப்படவுள்ளது.

இந் நிகழ்ச்சியை ஒட்டிய வைபவம் ஒன்று கொழும்பு பி. எம். எச். மண்டபத்தில் நடைபெறவுள்ளதுடன் வடக்குக் கிழக்கைச் சேர்ந்தவர்களையும் தென் பகுதியைச் சேர்ந்தவர்களையும் நாட்டின் பல பாகங்களுக்கும் அழைத்துச் செல்லவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாக முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரிகுணதிலக தெரிவித்துள்ளார். [வ)

# யாழ். வைத்தியசாலையில் மாணவன்திவ்யன்அனுமதி

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட யாழ்பல்கலைக் கழக விஞ்ஞானபீட மாணவன் இருஷ்ணசாமி திவ்வியன் நேற்றுமுன்தினம் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திவ்வியன்மீதான வழக்கு யாழ் மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து இவர்தொடர்பான மருத்துவ அறிக்கையினை மேல்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டிருந்தது இதனைத்தொடர்ந்து அவர்யாழ்போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திவ்வியன்தங்கியிருந்துசிகிச்சைபெறும் வாட்டுக்கு மூன்று பொலிஸ்மற்றும் இரண்டு சிறைச்சாலைஉத்தியோகத்தர்களும் பாதுகாப்புக்கடமைக்கு நிறுத்தப்பட வேண்டுமென்று நீதிவான் பணித்திருந்த போதும் சுமார் 5ற்குமேற்பட்ட பொலிசார் சிவில்உடையில் காவல்கடமையில் ஈடுபட்டுள்ளதையும் அவதானிக்கமுடிந்தது.

விலங்கிடப்படாத நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள திவ்வியனை பார்ப்பதற்கோ உணவு வழங்கவோ எவரும் அனுமதிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ-10)

# வடமராட்சியில் மீன்பிடிதடையைகண்டித்து 25ந் திகதி மறியல் போர்

(திருநெல்வேலி)

வடமராட்சிக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்குப் படையினரால் விதிக்கப்பட்ட தடையை நீக்கக்கோரி வல்வெட்டித்துறை மீனவர்கள் எதிர்வரும 25ம் திகதி செவ்வாய்க்கிழமை மறியல் போராட்டம் ஒன்றை பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பாக நடத்தவுள்ளனர்.

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி கூட்டுறவாளர் சங்கமும் வல்வெட்டித்துறை நகரசபையும் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது. (ந-43)

## புலிகளின்

குவிக்கப்பட்டுள்ளதுடன் கனரக வாகனங்கள் டாங்கிகள் அப்பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை குருநகர் பழையபூங்காவீதி, கடற்கரை வீதி, சுண்டுக்குழி வீதிகளில் நேற்று முன்தினம் படையினர் பெருமளவில் காணப்பட்டனர். (ந-4)

## ஜெயாவை

முன்னாள் தமிழக ஆளுநர் செல்வி பாத்திமாபீபி அப்பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது

செல்வி ஜெயலலிதா தொடர்பான உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கு தாம் கட்டுப்பட வேண்டும்.

ஆனால் அப்போதைய சூழ்நிலை, மாநிலத்தின் நிலைவரம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டுதான் எடுத்த முடிவு சரியானது என்றும் பாத்திமாபீபி தெரிவித்துள்ளார். (வ)

## 24அமைச்சர்களும்

களும் நேற்றிரவு ஆளுநர் முன்னிலையிலபதவி ஏற்றனர் பெரியகுளம்தொகுதியில் இருந்து சட்ட சபைக்குத்தெரிவு செய்யப்பட்ட கோ. பன்னீர்ச் செல்வம் ஜெயலலிதாவின் அமைச்சரவையில் வருவாய்த்துறை அமைச்சராகப பதவிவகித்தார்.

இப் பதவி ஏற்புவைபவத்தில முன்னாள் முதல்வரும அ.இ அ.தி.மு.க பொதுச் செயலாளருமானசெல்விஜெயலலிதாஉள்ளிட்ட பலதலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

ஜெயலலிதாவின் அமைச்சரவையில் இடம் பெற்றவர்களில் பெரும் பாலானோர் புதிய அமைச்சரவையிலும் இடம்பெற்றுள்ளனர். (வ)

## காரைநகர்ப்பெண்

ண சுட்டுக் கொல்லப் பட்டவராவர்.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கனடாவில் புடவைக்கடை வைத்திருக்கும் மேற்படி குடும்பத்தினர் கடையைப் பூட்டிவிட்டு காரில் செல்ல ஆயத்தமான போது வேறோர் காரில் வந்த முகமூடி அணிந்த இரு நபர்கள் இவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டதாகத் தெரியவருகிறது.

இக் கொலைச் சம்பவம் குறித்து கனடாவில் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கடந்த வாரமும் ஈழத் தமிழரான சரவணன் யோகராஜன் என்ற நபர் கனடாவில் சுட்டுக் கொல்லப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## சட்டம்

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தனது முதலமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தமை தொடர்பாக மு. கருணாநிதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சட்டம் தனது கடமையைத் திருப்திகரமாகச் செய்திருப்பதினால் அதில் திருப்தி ஏற்பட்டுள்ளது. இதில் எவரும் திருப்தி அடைவார்கள் என்றும் தெரிவித்துள்ளார். (வ)

## தமிழகமுதல்வர்

னத்தின் 173வது பிரிவின்படி அவருக்கு சட்டப்பேரவை உறுப்பினராவதற்கு இருக்க வேண்டிய தகைமைகள் இருக்கவேண்டும் என்றுகுறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த வழக்கினை ஐந்து நீதிபதிகள் விசாரித்தார்கள. நீதிபதி பறுஷர், சபர்வால் ருமாபால் ஆகியோர் ஜெயலலிதாவின் முதலமைச்சர் நியமனம் செல்லுபடியாக மாட்டாது என்று தீர்ப்பளித்தனர்.

நீதிபதிகள் பட்டாயக், பிறியேஸ்குமார் ஆகியோர் இதற்குஎதிராகத்தீர்ப்பளித்த போதும் பெரும்பான்மையான நீதிபதிகளின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதாகவும்தெரிவித்துள்ளனர்.

டான்ஸி நிலப்பேர ஊழல் வழக்கில் செல்வி ஜெயலலிதாவுக்கு தண்டனை விதிக்கப்பட்டிருப்பதால்அவரை முதலமைச்சராக அப்போதைய தமிழக ஆளுநர் செல்வி பாத்திமாபீபி நியமனம் செய்தமைக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட அம்மனுக்கள் மீதும் நீதிபதிகள் இநத முக்கிய தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

நீதிமன்ற தீர்ப்பை அடுத்து அ.இ.அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்கள் 132 பேரும் நேற்று அ.இ. அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா தலைமையில் கூடி தமது சட்டமன்றத்தலைவராக கோ. பன்னீர்செல்வத்தை ஒருமனதாகத் தெரிவு செய்தனர்.

இதற்குமுன்னர் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தமிழக ஆளுநர் ரங்கராஜனைச் சந்தித்து தனது நிலையை எடுத்துக் கூறி இராஜினாமாக் கடிதத்தைச் சமர்பபித்திருந்தார். செல்விஜெயலலிதாவின் இராஜினாமாவை ஆளுநர் ஏற்றுக் கொண்டு அ.தி மு.க சட்டமன்றத்தலைவர் கோ. பன்னீர்ச்செல்வத்தை தமிழக முதலமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். [வ]

## அமைச்சர்

மெண்டிஸின் பெயர் இடம் பெறவில்லை.

அமைச்சர் பதவியிலிருந்து தான் ராஜினாமாச் செய்யப்போவதில்லையெனவிஜயபால மெண்டிஸ் அறிவித்திருந்த போதிலும் அவரின்பெயர் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளது

இது இவ்வாறிருக்க விஜயபால மெண்டிஸின் இடத்திற்கே ஜெயராஜ்பெர்ண்டோ புள்ளே அமைச்சராகப் பதவியேற்றிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ந

## தமிழக

செய்தியில் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது,

அண்ணாதிராவிட முன்னேற்றக்கழக உடன்பிறப்புக்களும் பொதுமக்களும் நீதிமன்றத் தீர்ப்புக்குறித்து அமைதிகாக்கவேண்டும்எனது ராஜினாமா ஒரு தற்காலிக ஏற்பாடு. என்மீது உள்ள வழக்குகளை நீதிமன்றத்தில் சந்தித்து நான் நிரபராதி என்பதை நிரூபித்து மீண்டும் முதலமைச்சராக வருவேன் என்றும் தெரிவித்துள்ளார். (வ

மிற்சுயி (MITSUI) சீமெந்து விநியோகம்

எதிர்வரும் வார முற்பகுதியில் வரவிருக்கும் மிற்சுயி (MITSUI), அட்லஸ் (ATLAS) சீமெந்துகளின் ஓடர்களை முற்கூட்டியே பதியுமாறு வடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்

★ மிற்சுயி நம் நாட்டின் முதல்தர சீமெந்து ★

★ No.1 Cement in Sri lanka ★

தொடர்பு: ஜெசிபா ஏஜென்சி
132, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 2407 (கி-2622)

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.